விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# வலம்புரி

## Valampurii

SATS TECH
யாழ். நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 14 செவ்வாய்க்கிழமை (29.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

# இந்தியாவின் ஆதிக்கத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ள இலங்கையைப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிடின் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படும் என ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையில் மோதல் ஐந்து படையினர் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள பாலமோட்டைப் பகுதியூடான படையினரின் முன்னகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 7பேர் படுகாயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலமோட்டைப் பகுதியூடாக நேற்று மாலை 3.35 மணியளவில் படையினரின் பின்தளங்களிலிருந்து ஆட்லறி எறிகணை மற்றும் பல்குழல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வெடிகுண்டு மீட்பு

(வவுனியா)

வவுனியா பட்டைக்காடுப் பகுதியில் மரம் ஒன்றுக்கு அருகிலிருந்த வெடிகுண்டு ஒன்றை நேற்றுப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மரம் ஒன்றுக்கு அருகில் காணப்பட்ட சந்தேகத்திற்குரிய பொதியொன்றைச் சோதனைக்குட்படுத்திய போது இந்த வெடி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம் தொடர்பில் உயர் மட்டக் குழுவினர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வலி.வடக்கில் முதற்கட்டமாக மீள்குடியேற்ற வேண்டியவர்களை இனங்கண்டு அதற்கான விபரங்களை எதிர் வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வலி.வடக்குப் பிரதேச செயலர் மற்றும் வலி.வடக்கு இராணுவ கட்டளையிடும் அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தி இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர உத்தரவிடக் கோரி வலி.வடக்கு மக்களால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இம் மனுவை விசாரணை செய்து வரும் பிரதம நீதியரசர் சரத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேவன்பிட்டி மீது எறிகணைத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் தேவன்பிட்டியை நோக்கிப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தேவன்பிட்டியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இதில் தேவன்பிட்டியில் வசித்து வந்தவரான விநாயகர் செல்வகுமார் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். இ.கோமஸ் (வயது-25) மற்றும் அ.நந்தன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## இந்.பிரதமர் மன்மோகன் சிங்கை கூட்டமைப்பினர் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எதிர் வரும் முதலாம் திகதி மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்திப்பார் என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் முதலாம் திகதி கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அன்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்று மாலை நாடாளுமன்றத்தில் விவாதித்தது.

இதில் உள்ளக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் பிரசாரத்தினை முறியடித்துள்ளோம் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்பு அற்ற நாடு என உலகிற்குப் பொய்ப் பிரசாரத்தைக் கொண்டு சென்ற விடுதலைப்புலிகளின் செயற்பாடு சார்க் மாநாட்டை இங்கு நடத்துவதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வட பகுதி மீட்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கியூப நாட்டுத் தூதுவராகப் பணியாற்றி மாற்றலாகிச் செல்லும் திருமதி எனா வியன்ட் வல்தேஸ் நேற்றுப் பிரதமரின் அலுவலகத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்துப் பிரியாவிடை பெற்ற போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் அவர் கூறியதாவது, சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடனான தூதரக உறவை இந்திய அரசு துண்டிக்க வேண்டும்

### வை.கோபாலசாமி வலியுறுத்தல்



(சென்னை)

தமிழகக் கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கையுடனான தூதரக உறவை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ. வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழகக் கடற்றொழிலாளர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் தமிழகக் கடற்றொழிலாளர்களை பாதுகாக்கத் தவறிய மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும் இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் ம.தி.மு.க. கட்சி சார்பில் உண்ணா நிலைப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்திற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை அனுமதி அட்டைகள் விமானம் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. இவ் அனுமதி அட்டைகளைப் பாடசாலை அதிபர்கள் தங்களுடைய வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று காலை 10மணிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதியட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# நாட்டில் குற்றவாளிகளின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தைத் தாண்டியுள்ளது

## பொலிஸ் குற்றப்பதிவுப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளினது எண்ணிக்கை கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இந்த ஆண்டு பாரியளவில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் குற்றப்பதிவுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குற்றச் செயல்களினதும் குற்றவாளிகளினதும் எண்ணிக்கை பாரிய அளவு அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கள்ள நோட்டு அச்சிட்டமை,முத்திரைகள் அச்சிட்டமை,கொலை, கொலை முயற்சி, தாக்குதல்களை நடாத்தியமை,வீடுடைப்பு, களவு, கொள்ளை ஆள்மாறாட்டம், ஏமாற்று, மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ள பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவு இவர்களது கைவிரல் அடையாளத்தை கொண்டே பொலிஸ் பதிவுகள் மூலம் அவர்கள் மீண்டும் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு குற்றவாளி தொடர்பாகவும் தனித்தனியான கோவைகள் பேணப்படுகிறது. அதில் அவர்களது புகைப்படம், பெயர், குற்றச்செயல், அவரது கைவிரல் அடையாளத்துடன் தொடர்புடைக்கூடிய ஏனைய தகவல்கள் என்பனவும் இக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோவைகள் அனைத்தும் பொலிஸ் குற்றப் பதிவு பிரிவு அறையில் கடுமையான பாதுகாப்பின் கீழ் பேணப்படுகிறது.

இதேவேளை குற்றப்பதிவு பிரிவின் தகவல்களின்படி 3இலட்சத்து ஆயிரத்து 90 குற்றவாளிகள் நாட்டில் இருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 2இலட்சத்து 85ஆயிரம் பேர் ஆண் குற்றவாளிகள் எனவும் 15ஆயிரத்து 395 பேர் பெண் குற்றவாளிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் குற்றவாளிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்தைத் தாண்டி இருக்கும் முதல் சந்தர்ப்பம் எனவும் பொலிஸ் குற்றப் பதிவு பிரிவு தெரிவித்துள்ளது. (ச-5)

## யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் இறுதிப்போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடாத்தும் விலகல் முறையிலான 7 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது. இவ் இறுதிப்போட்டியில் பாடுமீன் ஏ அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்லஸ் அணி மோதவுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் உரும்பிராய் சென்.மைக்கல்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் பாடுமீன் ஏ அணியும் பாடுமீன் பி அணியும் மோத விருந்த போதிலும் பாடுமீன் பி அணி போட்டியில் கலந்து கொள்ளாததால் பாடுமீன் ஏ அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை இறுதிப்போட்டி நிகழ்வின் போது யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக சென்.றோக் அணியின் முன்னாள் வீரர் அ.அகஸ்ரின் கலந்து கொள்கிறார். (ச)

## திறைசேரியின் செயலர் இராஜினாமா

(கொழும்பு)

திறைசேரியின் செயலாளர் டி.பி.ஜெயசுந்தர நேற்று தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியின் செயலரிடம் கையளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சொத்துக்களை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கைமாற்றிய சந்தர்ப்பம் ஒன்றின்போது அவர் பக்கச்சார்பாக நடந்து கொண்டார் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனை அடுத்து உயர் நீதிமன்றம் 5 இலட்சம் ரூபாயை அபராதமாக செலுத்த வேண்டும் என அண்மையில் அவருக்கு உத்தரவிட்டது.

இந்த நிலையில் மேற்குறித்த அபராதத்தை செலுத்திய ஜெயசுந்தர அதன் பின்னர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுக்கலை பகுதி I பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகினால் இறுதியாக நடாத்தப்பட்ட பொதுக்கலை பகுதி Iற்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பெறுபேறுகளை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் பட்டப்படிப்புகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அத்துடன் இறுதியாக நடாத்தப்பட்ட பொதுக்கலை பகுதி IIற்கான பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் எனவும் வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்துள்ளார். (ஓ)

## மாவட்ட கண்காணிப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ)

# நாவலர் வீதியில் விபத்து பெண் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் கஸ்தூரியார் வீதிக்கு அண்மையாக நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வீட்டு வாசலில் நின்ற நாவலர் வீதியைச் சேர்ந்த எஸ்.வரதலஷ்மி (வயது 63) என்ற வயோதிபப் பெண்ணும் மோட்டார் சைக்கிளில் வந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ரி.ஹரிசங்கர் (வயது 21), பண்டத்தரிப்பைச் சேர்ந்த டி.பிரவீன் லக்ஸ்மன் (வயது 21) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

பலாலி வீதிப்பக்கமாக இருந்து நாவலர் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இருவர் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகினர்.

இதன்போது தனது வீட்டுக்கு முன்னால் நின்ற வயோதிபப் பெண் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்து காணப்பட்டது. (ச-5)

## வடக்கு பொலிஸ்மா அதிபராக பெர்னாண்டோ நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக டபிள்யூ.எஸ்.யூ.பெர்னாண்டோ கடந்த வாரம் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.கடந்த ஒரு வருடகாலத்திற்கு மேலாக வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித ஜெயசுந்தர இடமாற்றம் பெற்று சென்றதனை அடுத்து புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக டபிள்யூ.எஸ்.யூ. பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# மனித உரிமைகள் பாதுகாப்போர் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மனித உரிமைகள் பாதுகாப்போர் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் நிறுவனத்தின் பங்களிப்புடன் விசேட திட்டமொன்றினை 2002ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தி வருகின்றது. இந்த வகையில் கடந்த வருடங்களில் யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மற்றும் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்கள் உட்பட அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இடம்பெயர்ந்த மக்கள்,பிரதேச மக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதனூடாக இடம்பெயர்ந்த மக்களை வலுப்படுத்துவதும், சமாதான சுகவாழ்வுக்கும் மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்படுத்திக் கொடுப்பதுமே இப்பயிற்சி நெறியின் நோக்கமாகும். இப்பயிற்சி நெறிக்கு மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

பயிலுநர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்தின் போது பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக பங்குபற்றல் தொகையாக மிகச்சிறிதளவு தொகை பயிற்சிப் பட்டறை நடைபெறும் நாட்களில் வழங்கப்படும். **காலை உணவு, மதிய உணவு, மற்றும் பிரயாணப்படிகள் வழங்கப்பட மாட்டாது.**

**மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தெரிவுக்கான வரையறைகள்**

- வயதெல்லை 20-40
- சமூகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பொறுப்பு
- அனைத்து சமூக மட்டங்களுடனும் வேலை செய்யக்கூடிய இயலுமை
- ஆகக் குறைந்தது க.பொ.த (சா/த) கல்வித்தரம்
- பக்கச்சார்பற்றவராகவும்,செயற்பாட்டாளராகவும் இருத்தல் வேண்டும்
- சிறந்த தொடர்பாடல் திறன் உள்ளவர்களாகவும், தனிப்பட்ட வகையிலும் சமூக மட்டத்திலும் உரிமைகளை பாதுகாக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

குறிப்பு: இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்வதற்கு இடம்பெயர்ந்து நலம்புரி நிலையங்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்களது வீடுகளில் வசிப்போர், மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் வசிப்போரது விண்ணப்பங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து மனித உரிமைகள் பாதுகாவலர்களாக இருபாலரும் (பெண், ஆண்) தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவங்களை **திட்ட அதிகாரி, இடம்பெயர்ந்தோர்க்கான விசேட செயற்திட்டம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல.01,3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 04.08.2008 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல: 021 222 5470,மின்னஞ்சல் முகவரி: **rvpk@sltnet.lk** ஊடாக தொடர்பு கொள்ளவும்.






கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் அண்மையில் சுழிபுரம் மேற்கு விவசாய சம்மேளன பயனாளிகளுக்கு விவசாய உள்வீடுகள், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள் மற்றும் உர வகைகள் வழங்கப்பட்ட நிகழ்வில் கரித்தாஸ்-கியூடெக் பிரதிநிதி ரி.பாலமோகன் பயனாளிகளுக்கான உரிமைப் பத்திரத்தை வழங்குவதையும் வழங்கப்பட்ட பொருட்களுடன் பயனாளிகள் மற்றும் கரித்தாஸ்-கியூடெக் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

## க.பொ.த (உ/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும், கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகங்களையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் IIக்கு உட்பட்ட கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சை 2008 பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

க.பொ.த (உ/த) பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# இன்று ஒரு தகவல்

## அர்த்த பஞ்சகம்

நாம் ஒரு செயலில் இறங்குவதற்கு முன் ஆலோசனை செய்ய வேண்டிய விஷயங்கள் ஐந்து உண்டு.

உதாரணமாக ஒருவன் கடைக்குப் போய், ஒரு பொருளை வாங்குகிறான் என்று வைத்துக்கொள்வோம்.

முதலில் அவன் ஐந்து விஷயங்களைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக ''அந்தப் பொருள் எப்படிப்பட்டது?'' என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தன்னைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது தான் அந்தப் பொருள் தனக்குத் தேவையா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியும்!

மூன்றாவதாக அந்தப் பொருளை அடைவதற்கான வழி என்ன? எவ்வளவு பணம் கொடுத்தால் அது கிடைக்கும் என்றும் நான்காவதாக, அந்தப் பொருள் அடைவதன் மூலம் நாம் அடையக்கூடிய பயன் என்ன? என்றும் ஐந்தாவதாக, அந்தப் பொருளை அடைவதற்கு இருக்கக்கூடிய தடை எது? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்படி சின்ன சின்ன விஷயங்களில் நாம் ஐந்து விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பேரின்ப நிலை போன்ற சமாச்சாரங்களிலும் நாம் ஐந்து விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குப் பெயர் அர்த்த பஞ்சகம்.

வைணவ சமயத்தில் அர்த்த பஞ்சகம் என்பது ரொம்பப் பெரிய விஷயம்! கடைக்குப் போவது மாதிரி கடவுளைப் பார்க்கப் போகும் போதும் நாம் ஐந்து விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் பரம்பொருள் என்பது என்ன? அதன் தன்மைகள் என்ன? –என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பரமாத்ம ஸ்வரூபம் என்று பெயர்.

இரண்டாவது, நாம் யார்? நம்முடைய தன்மைகள் என்ன? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் யார்? என்று நமக்கே தெரியவில்லை எனும் போது ''நான் சொல்கிறேன் , இது என்னுடையது'' என்று சொல்வதும் தவறுதானே!

மூன்றாவது விஷயம் பரம்பொருளை நாம் அடைவதற்குரிய வழி எது? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு உபாய ஸ்வரூபம் என்று பெயர்.

நான்காவது விஷயம் நாம் அடைய வேண்டிய பயன்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வது. இதற்கு புருஷார்த்தம் என்று பெயர்.

ஐந்தாவது அந்த பயனை அடைய விடாமல் தடுக்கும் தடைகள் எவை என்று தெரிந்து கொள்வது. இது விரோதி ஸ்வரூபம்.

என்ன சார் இது... தகவலில் ஏதாவது கதை சொல்வீர்கள் என்று பார்த்தால் ''ஏதோ தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறீங்க'' என்று நீங்கள் நினைக்கலாம்.

இதுவும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் தான். காதில் போட்டு வையுங்கள். தக்க காலத்தில் உபயோகப்படும்.

ஒரு நண்பர் ஒருவர் , ''சார் அடுத்த மாதம் ஒரு கல்யாணம்! போறதா வேண்டாமா என்று குழப்பமாக இருக்கிறது!'' என்றார்.

நான் உடனே அர்த்த பஞ்சக உபதேசம் பண்ண ஆரம்பித்தேன். அவர் எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுவிட்டு, ''சரிசார்... நான் போவது என்று முடிவு செய்து விட்டேன்'' என்றார். ''எப்படி இந்த முடிவுக்கு வந்தீங்க?'' என்று கேட்டேன்.

''நீங்க சொன்ன இரண்டாவது பொயின்டைப் புரிந்து கொண்ட பின் தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்!'' என்றார்.

அதாவது, தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னீங்க உடனே என்னைப்பற்றி புரிந்து கொண்டேன் நான்யார் என்பது எனக்குத் தெரிந்தது. உடனே போவது தான் நல்லது என்று முடிவு செய்து விட்டேன்! என்றார்.

''நீங்க யார்?'' என்று கேட்டேன்.

''நான் தான் அந்த கல்யாணத்தில் தாலிகட்ட வேண்டிய மாப்பிள்ளை!''

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இலங்கை கடல் எல்லைக்கு அருகில் இரண்டு இந்திய போர் கப்பல்கள்

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் 15ஆவது சார்க் உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளவுள்ளதை முன்னிட்டு இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். ரன்விர் மற்றும் மைசூர் ஆகிய இரண்டு போர் கப்பல்கள் நங்கூரமிட்டிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

இலங்கை கடல் எல்லைக்கு அப்பாலே இந்த இரண்டு கப்பல்களும் கண்காணிப்பில் ஈடுபடும். சார்க் மாநாடு நடைபெறும் காலப் பகுதியில் இலங்கை கடற்படையினர் இலங்கை கடல் எல்லைக்குள் கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பார்கள் என உயர்மட்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சார்க் மாநாடு நடைபெறும் சமயத்தில் ஏதாவது அவசர தேவை ஏற்பட்டால் இந்த இரண்டு கப்பல்களும் அழைக்கப்படும் என அந்த அதிகாரி கூறியிருப்பதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் மாநாடு நடைபெறும் சமயத்தில் இலங்கை கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு மற்றும் கரையோரப் பாதுகாப்புக் கப்பல் என்பன க்ண்காணிப்பில் ஈடுபடும் எனவும் சார்க் மாநாடு முடிவடையும்வரை அந்தக் கப்பல்கள் கடல் எல்லைக்குள் நிறுத்தப்பட்டிருக்கும் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

கொழும்பில் சார்க் மாநாடு நடைபெறும் சமயத்தில் இந்தியாவின் தமிழகக் கரையோர முகாம்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கும் எனவும் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சார்க் மாநாட்டை முன்னிட்டு கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சார்க் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டுக்கான பாதுகாப்பு ஒத்திகையுடன் கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பெருமளவான பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டு திடீர் சோதனைகள், வீதிச் சோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-6)

# ஐ.தே.கட்சியுடன் உடன்பாட்டுக்கு வந்ததன் பின்னரே த.தே.கூட்டமைப்பை அழைக்க முடியும்

## சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப்பொதி தொடர்



பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொதுவான உடன்பாட்டுக்கு வந்ததன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு அழைக்க முடியும் என குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம்வகிக்காத சர்வகட்சி பிரதிநிதிகள் குழு முழுமையற்றது என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவினர் தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே பேராசிரியர் திஸ்ஸ விதாரண இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலுடன் தொடர்புபட்ட விடயங்களில். சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் 90 வீதம் பொதுவான உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் ஐக்கிய தேசியக்கட்சியும் குழுவில் மீண்டும் இணைந்துகொண்டு உடன்பாட்டுக்கு வருமானால் எஞ்சியுள்ள 10 வீதமும் பூரணப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் தற்போதுள்ள கட்சிகளுடனான விவகாரங்கள் முடிவுக்கு வந்ததன் பின்னர் நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுப்போம். இந்த நாட்டின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளிடையே பொதுவான உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் கவனம் செலுத்துவோம். அவ்வாறன்றி விடுதலைப்புலிகளின் அழுத்தங்களுக்கமைய செயற்படும் ஒரு கட்சியை குழுவில் இணைத்துக் கொள்ள நான் தயாரில்லை என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடமும் தான் விளக்கிக் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ''எப்படியிருப்பினும், நான் ஆரம்பத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தேன். ஆனால் அந்த நேரம் அவர்கள் அதனை நிராகரித்துவிட்டார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-6)

# இராசிபலன்

29.07.2008
(ஆடி14, செவ்வாய்க்கிழமை)
துவாதசி முன்னிரவு 11.11மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 11.15 மணிவரை
இராகுகாலம் 03.03-04.33மணிவரை
சுபநேரம்-10.33-12.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்தகாரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, போசன நன்மை. |
| இடபம் | வாக்குவாதம், முயற்சிதாமதம், பணவிரயம், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | தெய்வசிந்தை, பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி, போசனநன்மை. |
| கடகம் | பிரயாணம், காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | கீர்த்தி, காரிய நன்மை, மன மகிழ்ச்சி, தனலாபம். |
| கன்னி | அதிகாரம், நல்லமுயற்சி, போசனசுகம், நண்பர்கள் உதவி. |
| துலாம் | கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரியதாமதம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, வீண்பகை, முயற்சி தாமதம், போசனசுகம். |
| தனுசு | உடல்நலம், காரியநன்மை, தன்னம்பிக்கை, செல்வாக்கு. |
| மகரம் | தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், ஆரோக்கியம். |
| கும்பம் | வியாபார நன்மை, சிறுவியாதி, கௌரவக்குறைவு, முயற்சிதாமதம். |
| மீனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், உடல்நலக்குறைவு, சுபசெலவு. |

வளவன்

# லஷ்கர் இ தொய்பாவின் தாக்குதல் பட்டியலில் முதலிடத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

## மத்திய உளவுப் பிரிவு எச்சரிக்கை

(சென்னை)

லஷ்கர் இ தொய்பாவின் தாக்குதல் பட்டியலில் மதுரை மீனாட்சி



அம்மன் கோவில் முதலிடத்தில் இருப்பதாக தமிழக அரசை மத்திய உளவுப் பிரிவு எச்சரித்துள்ளது.

அண்மைக்காலமாக நாடு முழுவதும் அமைதியை சீர்குலைத்து கலவரங்களை ஏற்படுத்தி இந்தியாவின் அமைதியையும் பொருளாதாரத்தையும் சீர்குலைக்க தீவிரவாதிகள் குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தி வருகிறார்கள்.

இது வரை பொது மக்களின் உயிரோடு விளையாடி வந்த தீவிரவாதிகள் தற்போது மத வழிபாட்டுத் தலங்களிலும் குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தி மதக்கலவரங்களை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இந்த நிலையில் உலகப் புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பெரிய அளவிலான குண்டுவெடிப்பை ஏற்படுத்தி பெரும் பதட்டத்தை ஏற்படுத்த லஷ்கர் இ தொய்பா அமைப்பு திட்டமிட்டுள்ளதாக மத்திய உளவுப் பிரிவு தமிழக அரசை எச்சரித்துள்ளது. இது தவிர நாட்டில் உள்ள முக்கிய கோவில்களுக்கும் அது குறிவைத்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் ரோ மற்றும் ஐபி மூலம் மத்திய உட்துறைக்கு வந்துள்ளது. இதையடுத்து ஐபி இயக்குநர் பி.சி. ஹல்தார் தமிழக டி.ஜி.பி ஜெயினுக்கு எச்சரிக்கையுடன் தகவல் அனுப்பி வைத்துள்ளார். அதில் இவ்விடயத்தில் தமிழக அரசு மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-6)

## 'மலேசியா- யூனிவேர்சிட்டி செயின்' வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

''மலேசியா-யூனிவேர்சிட்டி'' செயின் வலைப்பந்தாட்ட அமைப்பால் நடாத்தப்பட வுள்ள.வெற்றிச் சுற்றுப் போட்டியில் கடந்த ஆண்டில் மாகாண மட்டத்தில் முதல் இடத் தைப் பெற்ற 15, 17 வயது அணிகள் பங்கு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அதற்கமைய யூனியன் கல்லூரியின் 15, 18 வயது வலைப்பந்தாட்ட அணிகள் பங்குகொள் ளும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றுள்ளதாக யூனியன் கல்லூரி அதிபர் எஸ். புண்ணிய சீலன் தெரிவித்துள்ளார். (ஓ)

## கொமர்ஷல் வங்கியின் சுப்பர் சேவர் வாரம்

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைகளில் புதிதாக அறிமுகமான அதியுயர் வட்டியுடன் கூடிய சுப்பர் சேவர் சேமிப்புக் கணக்கை விரிவுபடுத்துவதற்காக 18 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையும் சுப்பர் சேவர் வாரமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இக்கால எல்லைக்குள் கணக்குகளை ஆரம்பிக்கும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கவுள்ளதாக யாழ். கிளையின் உதவி முகாமையாளர் ஆர்.கஜரூபன் தெரிவித் தார். (அ)

## கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

நவாலி வை.எம்.சி.ஏ.யினால் இன்று செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத் தரங்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் இன்று செவ்வாய்க் கிழமை இந்துநாகரிகம், நாளை புதன்கிழ மை தமிழ், நாளை மறுநாள் வியாழக்கிழமை பொருளியல், வெள்ளிக்கிழமை புவியியல் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் நடை பெறவுள்ளன. (ஓ)

## உளவளத்துணை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் காலை 8.30 மணிக்கு உளவளத்துறை ஆசிரியர்க ளுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில், வழிகாட்டல் ஆலோ சனைக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்வதற்கு ஆவன செய்யு மாறு பாடசாலை அதிபர்களை யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (ஓ)

## ஆன்மீக சொற்பொழிவு

(அல்வாய்)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழ் வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை பூசைகள் முடிவடைந் ததும், 10.30 மணியளவில் "இதிகாசங்கள்" என்னும் தலைப்பில் "சைவப்புலவர்" பொன் .சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

# உரும்பிராயில் மக்கள் வங்கியின் சேவையை வளப்படுத்தவும்

## பொதுமக்கள் கோரிக்கை

உரும்பிராயில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் நீடித்த கருமபீடம் அப்பகுதி மக்களுக்கு மகத்தான சேவையை வழங்கி வருகின்றது. ஆனாலும் வங்கியில் கடமை யாற்றும் ஊழியர்களின் பற்றாக்குறையி னால் வாடிக்கையாளர்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது.

பலாலி வீதித்தடை போடப்படுவதற்கு முன் வாடிக்கையாளர்கள் வங்கியை விட்டு வெளியேறி விடவேண்டும். தவறினால் ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும் என்ப தனால் மக்கள் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு முண்டிய டிக்கின்றனர்.

ஒரு சிறிய கட்டடத்திற்குள் இருந்து பல சேவைகளை ஆற்றும் அவ் வங்கி அப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். 47 ஆவது நிறைவைக் கொண்டாடும் மக்கள் வங்கி உரும்பிராய் கிளையில் ஊழியர்களை அதிகரித்து சிறப்பான சேவைகளை வழங்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொள் கின்றனர். (ஓ-36)

## சுப்பர் 6 சுற்றுக்கு முன்னேறியது யாழ்ப்பாணக் கல்லூரி

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெற் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசா லைகள் கிரிக்கெற் சங்கம் பாடசாலை அணி களின் 15 வயதுப் பிரிவினருக்கு இடையே நடாத்திவரும் சுற்றுப் போட்டியில் முதல் சுற்றில் இடம்பெற்ற நான்கு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி சுப்பர் 6இல் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

சென்ஜோன்ஸ் கல்லூரி B அணிக்கு எதிரான ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 123 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத் தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பெண்டில்கரன் 4 பவுண் டரிகள் உட்பட 64ஓட்டங்களையும், பென்ஜோ 6 பவுண்டரிகள் உட்பட 35 ஓட்டங்களையும் 'எஸ்.மதுசன் 4பவுண்டரி கள் உட்பட 30ஓட்டங் களையும் பெற்றனர். கஜேந்திரன் ஆட்ட மிழக்காமல் 1 பவுண்டரி உட்பட 33 ஓட்டங்க ளையும் பெற்றார். உதிரிகளாக 29 ஓட்டங் கள் பெறப்பட்டது.

பந்துவீச்சில் வில்சன் 9 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களையும், சபேசன் 9 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங் களுக்கு 2 விக்கெற்றுக்களையும் கவாஸ்கர் 3 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்களில் சகல விக்கெற்றுக் களையும் இழந்து 75 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் வில்சன் 1 பவுண்டரி உட்பட 17 ஓட்டங்களையும் ஸ்டீபன் 2 பவுண் டரிகள் உட்பட 9 ட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 24 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக பந்துவீசிய சோபிநாத் சுவன் 10 ஓவர்கள் பந்துவீசி 1 ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களையும், பவகுகன் 7 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெற் றுக்களையும் கைப்பற்றினர். (அ)


## வழுக்கையாறுக்குட்பட்ட குளப் புனரமைப்புக்கான உறுதிப்படுத்தல் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் ஊடாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட வுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத் திற்குட்பட்ட குளங்களுக்கும் ஏனைய குளங் களுக்குமான உறுதிப்படுத்தல் கூட்டங்கள் பின்வரும் ஒழுங்கில் நடாத்துவதற்கு ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளது.

இக் குளங்களுக்கான கூட்டங்கள் 31 ஆம் திக்தி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் சங் கரத்தை சம்மேளன பிரிவிலுள்ள குளங்க ளான கொம்புத்தானைக்குளம், பால்குளம், சங்கரத்தை குளம்,ஓடைவாய்க்கால் என்பவற் றிற்கும் அராலி சம்மேளன பிரிவிலுள்ள கொட்டானைக்குளம்,கொட்டானை வாய்க் காலுக்கும், பனிப்புலம் பண்ணாகத்திற் குட்பட்ட நரசிங்கன் குளத்திற்கும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 11.30 மணிக்கு சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தில் நவாலி சம்மேளன பிரிவிலுள்ள ஆம்பல் குளம், வேலக்கை குளம் என்பவற்றிற்கும் மானிப்பாய் மேற்கு சம்மேளன பிரிவிலுள்ள மருதடி குளம் மற்றும் சுதுமலைக் கோவில் குளம் என்பவற்றிற்குமான கூட்டங்களும் உடுவில் கமநல சேவை நிலையத்தில் பிறப கல் 2.30 மணிக்கு உடுவில் வடக்கு சின்னக் குளம் சங்குவேலி மானிப்பாய் பிரிவிற்குட் பட்ட கேலன்காமம் குளம் ஆகியவற்றிற்கும் நடைபெறும்.

இக் கூட்டங்களில் அரசாங்க அதிபர் நியாப் பிரதித் திட்ட பணிப்பாளர் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு இவ் வேலைத் திட்டம் தொடர்பான பூரண விளக்கங் கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இறுதி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருப்பதி னால் குறிப்பிட்ட குளத்துடன் தொடர்புடைய விவசாயிகள் மற்றும் சம்மேளனப் பிரதிநிதி கள் இக் கூட்டத்தில் தவறாது கலந்து பயன் பெறுமாறும் கமநல அபிவிருத்தித் திணைக் கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இலங்கை வங்கியின் பொன் அரும்புகள் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தை அதிபர் என்.அனந்தீஸ்வரன் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம், பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் பி.ஆனந்தநடேசன், பிரதி அதிபர் எஸ்.திருஞானசம்பந்தர் ஆகியோர் நிற்பதையும், பொன் அரும்புகள் மன்றத்தலைவி மாணவியொருவருக்கு வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கையளிப்பதையும் படங்களில் காண லாம்.
(படங்கள்:பரு.நிருபர்)

## கலாசார பேரவை பொதுக்கூட்டம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவை பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரி வும் கலாசார விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் அனைத் துக் கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும், புதிதாக அங்கத்துவம் பெற விரும்பும் கலைஞர்கள் 30ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் அங்கத்துவப் படிவங்களைப் பெற்று பேரவையில் இணைந்து கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச செய லரும், கலாசாரப் பேரவையின் தலைவ ருமான பா.செந்தில்நந்தனன் கேட்டுக் கொள் கின்றார். (ஓ)

## மாகாண மட்ட பட்மின்ரன் போட்டி

கனிஷ்ட தேசிய மட்ட பட்மின்ரன் போட்டிக் கான மாகாணமட்டப் போட்டி -2008 இன் முதலாவது கட்ட மாகாண மட்ட போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத் தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற ஆண், பெண் இருபாலாரும் இதற்கான விண்ணப்பப்படிவங்களை ஜெ.மோகன் ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி மற்றும் செல்வி சி.சின்னப்பு ஆசிரியர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகியோரிடம் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்பாக கையளிக்குமாறு யாழ்.மாவட்ட பட்மின்ரன் சங்கம் கேட்டுக்கொண்டுள் ளது. (ஓ)

## தமிழ் விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ் விழா கல்லூரிக் கலை யரங்கில் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் செல்வன் செ. தர்மராஜ் தலைமையில் நடைபெற உள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்க் லைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேரா சிரியர் சி.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தின ராக யாழ்.வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் கௌரவ விருந்தினராக கோப்பாய் கிறிஸ்த வக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் செ.தம்பையா ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

அத்துடன் கலை நிகழ்ச்சிகளாக இசை, நடனம்,நாடகம் என்பனவும் இடம்பெறவுள் ளது என கல்லூரி அதிபர் கே.ஆர். இராஜசேகரம் அறிவித்துள்ளார். (ஓ)




## வருடாந்த அலங்கார உற்சவம்

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெக சோதி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. விழாவில் தினமும் 4 மணிக்கு அம்பாள் வீதி உலாக் காட்சி இடம்பெறுகின்றது.

பதினோராம் திருவிழாவான 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.மணிக்கு (108) சங்காபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். அதனையடுத்து அம்பாளுக்கு ருதுசாந்தி வைபவம் நிகழும்.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல், அம்பாள் வீதியுலா வருதல் ஆகியன இடம்பெறும். (ஓ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக்கல்வி சைவ விழுமியம் பேணல் போட்டி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் தலை மையில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார்.

இதில் சிறப்புரையை திருமதி பா. பாலசிங்க மும் பண்ணிசையை புனித ஜோண் பொஸ் கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி ஜே. ஆரபியும் வழங்குவர். (ஓ)

# நோத் முதல் கோல்புறாக் வரை 51

### கோல்புறாக் கெமறன் திருத்தத்தின் பின்

ஆங்கிலம் அரசாங்க மொழியாக்கப் பட்டதால் ஆங்கிலங் கற்றவர்கள் உலக நிகழ்ச்சிகளை அறியவும், சமூக நிலையை மாற்றியமைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இங்கிலாந்தில் மத்திய தர வகுப்பார் எனப்படும் நடுவகுப்பார் போல இலங்கையிலும் ஒரு முன்னேற்றமுள்ளவர் நிலவழி ஏற்பட்டுள்ளது. நீதியின்முன் சகலரும் சமம் என்பதும், உயர்தர குடியியற் சேவையில் இ லங்கையரும் சேரலாம் என்றமையும் நல்ல அம்சங்களே. இன்னும் இலங்கையில் கோல்புறாக் திருத்தங்களால் வேறுபல காரியங்களும் நடைபெறலாயின.

1. சிங்கள - தமிழ் சமூகங்கள் மாறியமைய வழிபிறந்தது.

2. அவர்கள் தங்களுக்குத் தலைச் சுமையாய் இருந்த [illegible]ணிகளை விட்டுத் தாம் விரும்[illegible]தில் குடியேறி விருப்பமான தொழி[illegible]செய்ய வசதியுள்ளவராயினர்.

3. அரசாங்கத்தின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டதால் மக்கள் தாமே வியாபாரம், வர்த்தகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

4. இவ்வாறான வசதிகளையெல்லாம் கோல்புறாக் அமைத்த ஒற்றை ஆட்சி பலப்படுத்தியது.

கோல்புறாக் செய்த பொருளாதார அமைப்பினால் முன்னர் பல முயற்சிகளாலும் மாற்ற இயலாதிருந்த சாதி வித்தியாசம் நீக்கப்பட வழிபிறந்தது. கோல்புறாக் கொள்கைகளே தாராண்மைவாதிகளால் கூறப்பட்டவைகளேயாம். அவை சீர்திருத்தங்கள் அரச யாப்பு சம்பந்தமாயும், சட்டமுறை சம்பந்தமாயும், சமூக அமைப்பு சம்பந்தமாயும், பொருளாதார அமைப்பு சம்பந்தமாயும் ஏற்படுதல் வேண்டுமென்று கூறுவனவாயுள்ளன.

மனிதர் எல்லோரும் சமத்துவம் உள்ளவரானால் வேற்றுமை இருத்தலாகாது. வேற்றுமை யுண்டேல் அதற்குத்தகுந்த காரணம் உளவாதல் வேண்டும். மனி த ருக்குரி யதான

**மீள் பார்வை**

உரிமைகள் யாவும் சட்டங்களால் அளிக்கப்பட்டுச் சட்டங்களால் பாதுகாக்கப்பட்டுப் பொது நன்மை பயப்பனவாயிருத்தல் வேண்டும். உரிமையளிக்கும் மசோதாக்கள் ஏட்டுச் சுரக்காயாய் எழுத்தில் இருப்பதில் எத்துணையும் பிரயோசனமில்லை. சட்டங்கள் கீழ்ப்படியச் செய்யப்படுவனவேயன்றி மறுக்கப்படவல்ல. சட்டங்களைப் பொதுமக்கள் வெறுக்கும் போது கலகங்கள் உண்டாகின்றன. எனவே சட்டங்கள் பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவாதல் வேண்டும்.

நாட்டில் குற்றங்கள் நிகழாதவாறும், நிகழ்ந்தவழி குற்றவாளிகளை அகப்படுத்தி நீதிமன்றத்தில் ஒப்புவித்ததற்குமாகவே பொலிசுக்காரர் சேவை செய்கிறார்கள். இலங்கையில் 1833ஆம் ஆண்டிலே தான் பொலிசுக்காரர் கூலியின் பொருட்டு வேலை செய்யத் தொடங்கினார்கள். இங்கிலாந்திலும் 1829ஆம் ஆண்டிலேதான் பொலிசுப் பகுதியினருக்கு முறையான சம்பளத்திட்டம் வகுக்கப்பட்டது.

ஆள்பதி சேர் எட்வேட் பாண்ஸ் அவர்கள் கோல்புறாக் திருத்தங்களை அறவே வெறுத்தார். சுதேசிகளை உயர்தர உத்தியோகங்களில் அமர்த்துவதை அவர் எள்ளளவும் விரும்பவில்லை. அவர் தமது கருத்தைக் கோல்புறாக் சபையினருக்கே தெளிவாக எழுதியும் விட்டார். ''பொதுமக்களுக்கு இன்றுள்ள நிலைமையில் இதற்கு மேல் சலுகைகளோ வசதிகளோ செய்வதற்கு அவர்கள் தகுதி வாய்ந்தவராக இல்லை என்பதே என்னுடைய சொந்த அபிப்பிராயம்'' என்று குறிப் பிட்டார். ஆனால் அக்காலத்தில் குடியேற்ற நாட்டு மந்திரியாராய் இருந்த கொட்றிச் என்ற பெரியார் பாண்ஸ் கூறியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கோல்புறாக் தகவுரையின் வண்ணம் சட்டசபையை நிறுவுவதற்கே வழிவகுத்தார்.

கோல்புறுக் குழுவினர் அமைத்த சட்டசபை எவ்வளவுதான் திறமையாய் இருந்தபோதிலும் அதில் பிழைகள் இல்லாமல் போகவில்லை. அதன் அமைப்பை மேல்வெட்டாகப் பார்க்கும்போதே பல பிழைகள் தென்படுகின்றன. அவை:

1. ஆள்பதி அவர்கள் சட்டசபைக்கு எவ்வாற்றானும் கட்டுப்படாமை.

2. சட்டசபை அங்கத்தவர் தேர்தல்மூலம் இடம் பெறாமல் ஆள்பதியால் நியமிக்கப்பட்டமை.

3. இலங்கையின் வரவு செலவுத்திட்டம் பிரதிநிதிகளின் கண்ணிற்படாமல் ஆள்பதியால் தயாரிக்கப்பட்டமை.




4. இலங்கைவாசிகளை இனவாரியாகக் கணித்தபின் கண்டியருக்கும் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதிகளை நியமிக்காமை.

5. நியமிக்கப்பெற்ற உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் தம் ஆயுள் பரியந்தம் சட்டசபையை அலங்கரித்தமை.

**க.சி.குலரத்தினம்**


கோல்புறாக் திருத்தத்தின் பயனாக முன்னர் நாட்டில் நிலவிய கன்சபாவ, றட்ட சபாவ என்ற கிராம மன்றங்கள் அதிகாரமிழந்தன. அவை மக்கள் மன்றங்களாய்ப் பொதுமக்களுக்கு மனத்திருப்தியளிக்கக் கூடிய வகையில் தீர்ப்பளிக்கக் கூடியனவாய் நாட்டுப் பெரியாரைக் கொண்டனவாய் நிலவிய வை, கிராம மன்றங்கள் இல்லாது போகவே நாட்டுப்புற மக்கள் நகரங்களில் ஏற்பட்டி ருந்த நீதிமன்றங்களைத் தேடி நெடுந்தூரம் அலைந்து அங்கே அதிக செலவு செய்து வழக்கறிஞரிடம் வழக்குகளை கூறி மேலதிக முத்திரைச் செலவு கொடுத்துத் தவணைதோறும் அலைந்து ஈற்றில் பெற்ற நீதியும் சில சமயங்களில் திருப்தியற்றதாகவே இருந்தது. (தொடரும்)













யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் க.ஸ்ரீகணேசனின் ''சாந்தனது எழுத்துலகம்'' நூல் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன், பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# 19 ஆம் நூற்றாண்டு 3

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்



### அச்சியந்திரம்

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் 19ஆம் நூற்றாண்டிலே கல்வி, கலை இலக்கிய பண்பாட்டு முயற்சிகளிற் சாதனைபுரிவதற்கு உந்து சக்தியாக அமைந்த காரணிகளில் அச்சியந்திரத்தின் பயன்பாடு முக்கியமானதும் முதன்மையானதும் எனலாம். ஈழத்தில் ஒல்லாந்தராட்சி காலப்பகுதியிலேயே அச்சியந்திரத்தின் பயன்பாடு தொடங்கிவிட்டது. எனினும் அவை மிஷனரிமாரினதும் மேலைத்தேய நிறுவனங்களினதும் ஏகபோக உரிமையுடையனவாய் இருந்தன. இதனால் இவற்றின் பயன்பாடு பெருமளவுக்கு கிறிஸ்தவ சமயப் பிரச்சாரத்திற்கும் ஒரு சில மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்குமே பயன்படுத்தப்பட்டன.

அச்சியந்திரத்தின் பயன்பாட்டிற்கு வரு முன்னர் 'பெருஞ்சிரமப்பட்டு' நூல்களை ஏடுகளில் எழுதினர், எழுதுவித்தனர். பெரும் பொருட் செலவும் மிகுதியான காலஅவகாசமும் ஒருநூலைப் பிரதி செய்யத் தேவைப்பட்டது. கல்வி பரவலாகி எழுதப் படிக்கத் தெரிந்தோர் பெருகிய நிலைக்கேற்ப ஏடுகளின் தொகை அதிகரிக்கவில்லை. கிடைக்கும் ஏடுகளின் விலையும் மிக அதிகமாக இருந்தது. அச்சு நூல்கள் வருவதற்கு முன் இலக்கிய இலக்கண ஏடுகளைப் பொன் விலைக்கே பெற்றுப் படிக்க வேண்டியிருந்தது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் மிஷனரிமாருக்கு மட்டுமென இருந்த அச்சியந்திர உபயோக உரிமை தளர்த்தப்பட்டுக் கிறிஸ்தவர்களல்லாத சுதேசிகளும் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்றனர். சுதேசிகளால் அச்சியந்திர சாலைகள் நிறுவப்பட்டதும் அச்சுக் கலையின் செயற்பாடும் பயன்பாடும் விரிவடையத் தொடங்கின.

இந்த வகையிலே 1849 ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் நல்லூரிலே நிறுவிய வித்தியாநுபாலன யந்திரசாலைக்கு ஓர் வரலாற்று முக்கியத்துவம் உண்டு. தமிழ் மொழி இலக்கியம், இலக்கணம், இந்துசமய முதலிய துறைகளிலே ஈழநாடு புதுமையைக் காண இவ்வச்சகம் உதவியது. அச்சியந்திர வசதியினாற் 19ஆம் நூற்றாண்டு கலை இலக்கியத்துறையிலே பாரிய விளைவுகளைச் சந்தித்தது. ஈழத்தவர்களின் இலக்கிய சாதனைகள் பலவற்றிற்கு அச்சியந்திர வசதியே அடிப் படைக் காரணம் எனலாம்.

அச்சகத்தின் பயன்பாட்டினால் இலக்கியம் அடைந்த பயன்பற்றிப் பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுவது இவ் விடத்திலே மனங்கொள்ளத்தக்கது.

*ஏட்டுச்சுவடிகள் முடங்கிக் கிடந்த பழந்தமிழ் இலக்கண இலக்கிய சாத்திர நூல்கள் சொற் ப விலையில் ஆயிரக்கணக்கான பிரதிகளாக நடமாடும் சூழ்நிலை தோன்றியது. இது இலக்கியத்தின் பண்பிலும் பெருமாற் றத்தை உண்டாக்கியது. பிரபுக்கள், ஜமின்தார்கள் , சிற்றரசர்கள், மடாதிபதிகள், கணக்காயர்கள் மட்டத்தில் மட்டும் வழங்கிய இலக்கியம் ஓரளவு பொது மக்கள் மட்டத்திற்குப் பரவ வழிபிறந்தது,*

19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அச்சுக்கூடங்கள் நிறுவியோரிற் பலர் தமிழிலக்கிய இலக்கணங்களிலும் வடமொழி (சிலர்) ஆங்கிலத்திலும் சிறந்த பாண்டியத்தியமுடையவர்களாக விளங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தாமியற்றிய நூல்களை மாத்திரமன்றிப் பிறரின் ஆக்கங்களையும் பழைய நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். மிஷனரிமாரின் அச்சுக் கூடங்களில் இருந்து வெளிவராத பல தமிழ் நூல்கள் சுதேசிக ளின் அச்சுக் கூடங்களில் இருந்து வெளிவந்தன.

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிக்குள் ஈழத்திலே அச்சுக் கலை அதிசயிக்கத்தக்க விதத்திலே வளர்ச்சியடைந்தது. அச்சியந்திரசாலை பெருகப் பெருக புதுப்புது நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பதிப்புக்கள், பத்திரிகைகள் எனப் பல வகையான வெளியீடுகளும் வரத்தொடங்கின.

### பத்திரிகைகள்

அச்சியந்திரத்தின் அறுவடைகளில் ஒன்றாக பத்திரிகைகளைக் கூறலாம். கல்வி பரவலாகிய அக்காலச் சூழ்நிலையில், பொது மக்கள் தொடர்பு ஊடகமாகப் பயன்பட்ட மிகச் சிறந்த சாதனமாக பத்திரிகையைக் கொள்ளலாம்.

அமெரிக்க மிஷனரிமார் 1841 இல் ஆரம்பித்த ''உதயதாரகை'' அல்லது Morning star என்னும் பத்திரிகைக்கு ஈழத்துப் பத்திரிகைத்துறை வரலாற்றிலே சிறப்பானதோர் இடமுண்டு. ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்த இப் பத்திரிகை சமய விடயங்களோடு இலக்கிய, இலக்கண , சமூக சமகால விடயங்களையும் பிரசுரித்து வந்தது. மாதம் இருமுறை வெளியான உதயதாரகையின் ஆரம்ப காலப் பத்திராதிபர்களாக (பத்திரிகை ஆசிரியர்களாக) கென்றிமாட்டின், செத் பேசன் என்னும் இரு தமிழர்களே நியமிக்கப்பட்டனர்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

வட்டுக்கோட்டைச்செமினரியன் சமய கல்விப் பின்னணியுடைய மேற்படி ஆசிரியர்கள் ஓரளவுக்கு சமூகப் பிரக்ஞையுடனும் செயற்பட்டனர் என்பதை ஆரம்ப காலத் ''தாரகை'' களைப் படிப்போர் உணர்வர். (தொடரும்)

# ஜானக பெரேரா வெற்றி பெற்றால் நான் பதவி விலகுவேன்

## மேர்வின் சில்வா சவால்

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபைக்கு போட்டியிடும் முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா வெற்றியீட்டினால் பதவி விலகுவேன் என்று அமைச்சர் மேர்வின் சவால் விட்டுள்ளார்.

இதுதொடர்பில் அனுராதபுரத்தில் நடைபெற்ற பேரணியில் அவர் கூறியதாவது,

வடமத்திய மாகாண சபைக்கு போட்டியிடும் ஜானகபெரேரா சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் உபாலி விஜயக் கோனை விட ஒரு வாக்கை அதிகமாக பெற்றாலும் நான் பதவி விலக தயாராகவுள்ளேன்.

அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதலில் உயிர்தப்பிய இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவரே விஜயக்கோன். அத் தாக்குதலில் டென்சில் கொப்பேக்கடுவ, விஜய விமலரட்ன உட்பட ஏழு உயர் அதிகாரிகள் பலியாகியிருந்தனர்.

இதில் விஜயக் கோன் ஊனமடைந்திருந்தார் என்றார் அவர். (அ-6)

# ஐந்து மாகாண சபைகள் செப்ரெம்பரில் கலைப்பு

(கொழும்பு)

மேல்மாகாண சபை உள்ளிட்ட ஐந்து மாகாண சபைகளும் செப்டம்பர் மாதம் கலைக்கப்பட்டு, நவம்பர்மாதம் அதற்கான தேர்தல்கள், ஒரே தடவையில் நடத்தப்படவுள்ளன. இதற்கான தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்கள் அடுத்த மாதம் நிறைவுற்றவுடன் அதற்கடுத்த மாதம் 20ஆம் திகதி ஐந்து மாகாண சபைகளும் ஒரே தடவையில் கலைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


ஊவா மாகாணம், மேல் மாகாணம், தென் மாகாணம்,மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் ஆகிய மாகாண சபைகளே கலைக்கப்படவுள்ள மாகாண சபைகளாகும். இம் மாகாண சபைகளில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை பலம் இல்லாததே சபைகள் கலைப்பதற்கான காரணமென்று தெரிவிக்கப்படுகின்றது. ஆளும் கட்சியிடமிருந்த மக்கள் விடுதலை முன்னணி சார்பான உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கான ஆதரவினை விலக்கிக் கொண்டமையினால் ஆளும் கட்சிக்கு பலமில்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. மாகாண சபைகளின் வரவு - செலவுத் திட்டம், இவ்வருட இறுதியில் சமர்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்படுகையில் ஆளும்கட்சி தோல்வியடையும் பட்சத்தில் சபைகள் கலைக்கப்பட வேண்டிய நிலை இருப்பதினால் அதற்கு முன் சபைகளைக் கலைத்து தேர்தலை நடத்தி விட அரசு திட்டமிட்டிருப்பதாக அரசின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (அ-6)

# ஜி.எஸ்.பி.பிளஸ் வரி சலுகை நீடிப்பு விடயத்தில் நிபந்தனையின்றி அரசுக்கு ஆதரவு வழங்க தயார்

## ஐ.தே.க,எம்.பி.ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டின் வெளிநாட்டு அமைச்சருக்கும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருக்கும் இடையேயான முரண்பாடுகளால் ஜி.எஸ்.பிளஸ் வரியை இழப்பதற்கும்



ஒரு இலட்சம் தொழிலாளர்களை பலிக்கடாக்கள் ஆக்குவதற்கும் நாம்தயார் இல்லை எனவே இந்த வரிச்சலுகையினை பாதுகாப்பதற்காக அரசாங்கத்திற்கு நிபந்தனை இன்றி ஆதரவு வழங்க எமது கட்சி தயாராகவுள்ளது என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக ரவி கருணா நாயக்க எம்.பி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

கடத்தல், கப்பம் கோருதல் ஊடக அடக்குமுறைகள், கொலைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அதனை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தோம்.

ஆனால் அரசாங்கம் அதனை செவிமடுக்க வில்லை. இன்று வெள்ளைக்காரன் இங்கு வந்து மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தவேண்டும் என நிபந்தனை விதிக்கும் அளவிற்கு நிலமை மோசமடைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் எச்சரிக்கையானது எதிர்காலத்தில் எமது ஆடல் தொழில் துறைக்கு கிடைத்துள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரியை இழப்பதற்கு வழி கோலும்.

அதேவேளை, வெளி நாட்டமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பிரீஸ்சுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளால் இவ்வரியை இழப்பதற்கு இடமளிக்க மாட்டோம். இவர்களிடையேயான முறுகலால் ஒரு இலட்சம் ஊழியர்களை பலிக்காடக்களாக்கவும் முடியாது.

எனவே அரசாங்கம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு ஊடக சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கைவிட வேண்டும். அத்தோடு 17 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து ஜனநாயகத்தை பாதுகாக்கவேண்டும்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்திலேயே நாட்டுக்கு நன்மை பயக்கும் இந்த வரி பெற்றுக்கொடுக்கப்பட்டது. எனவே இது ரத்துச்செய்யப்படுவதற்கு அனுமதிக்க முடியாது இது தொடர்பில் நிபந்தனை இன்றி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க ஐ.தே.க.கட்சி தயாராகவுள்ளது என்றார். (அ-6)

## பனாகொடை இராணுவ முகாமில் தீ விபத்து

பனாகொடை இராணுவ முகாமில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பனாகொடை இராணுவ முகாமின் துணிகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அறையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவ முகாம் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. மின்சார ஒழுக்கு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ விபத்தினால் முகாம் நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை என முகாமைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதேவேளை ,தீ விபத்து தொடர்பாக தற்போது மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

# மோதல் சூழலால் வன்னியில் 55 பாடசாலைகள் மூடப்பட்டன

## இரண்டாம் தவணைப் பரீட்சையும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வன்னியில் படையினர் முன்னெடுத் துள்ள பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக 55 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தின் கட்டுப் பாடற்ற பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் படையினர் ஆரம்பித்த பாரிய நடவடிக்கை உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தின் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். இம் மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை, படையினர் மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியைக் கைப் பற்றியதை அடுத்து மன்னார்-கிளிநொச்சி, மன்னார் -முல்லைதீவு எல்லைப்பகுதி மக்களும் கிளிநொச்சியின் மையப்பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

இந் நிலையில் வன்னியில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக சர்வதேச மனித நேய தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களின் இப்பாரிய இடம்பெயர்வு காரணமாக ஏற்கனவே இடம்பெயர்ந்து வெள்ளாங்குளம் பகுதியில் இயங்கிவந்த மன்னார் மடுவலய பாடசாலைகள் மூடப்பட்டன. மடுவலய கல்வித்திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளத்தில் தற்காலிகமாக இயங்குவதாகவும் மக்கள் பல்வேறு பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளதால் மடு வலய பாடசாலைகளை தற்காலிகமாக இயக்குவது கடினம் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

இதனால் மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தின் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மன்னாரில் மடுவலயத்தைச்சேர்ந்த 35 பாடசாலைகளும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் 20 பாடசாலைகளுமாக வன்னியில் சுமார் 55 பாடசாலை மூடப்பட்டுள்ளன. பாரிய இடப்பெயர்வு பாடசாலைகள் இயங்க முடியாது மூடப்பட்டுள்ளமையால் வன்னியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மனித நேய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இராணுவ நடவடிக்கைகள் மக்களின் இடப்பெயர்வு காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து வன்னிக்கு கடமைக்காக செல்லும் ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள அதிகாரிகள் கிராம சேவகர்கள் பிரதேச சபைச் செயலாளர்கள் செயலக ஊழியர்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

ஓமந்தை ஊடான போக்குவரத்தில் ஏற்படும் தாமதம் பாதைகள் சீரின்மை காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகள் சவாலானதாக மாறியுள்ளதாக ஐ.நா. உட்பட சர்வதேச தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (அ-6)

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓர் இராணுவ ஆட்சியாளர் அல்ல

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு யுத்தத்தை முன்னெடுத்த போதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இராணுவ ஆட்சியாளராகக் கருத முடியாதென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சிங்கப்பூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரி வித்துள்ளார்.

யுத்தம் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கு இடையில் ஓர் சமநிலை பேணப்பட வேண்டியது இன்றியமையாததென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஓர் இராணுவ ஆட்சியாளராகக் கருதப்படுகின்ற போதிலும் அவர் சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

# கடத்தல்,கப்பம் பெறும் சம்பவங்களினாலேயே சர்வதேசத்தின் தலையீடு நாட்டில் அதிகரிப்பு

## அரசே வழியை ஏற்படுத்துவதாக ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடத்தல் மற்றும் கப்பம் பெறும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் தொடர்வதனாலேயே சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரித்துவருகின்றன.

அரசாங்கமே சர்வதேச தலையீட்டுக்கான வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் எம்.பியு மான விஜிதகேரத் தெரிவித்தார்.

ஆடைத்தொழில்துறை ஏற்றுமதிக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரியை பாதுகாத்துக் கொள்வதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஒரு இலட்சம் பேர் தொழில் இழக்க நேரி டும் என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இங்கு மனித உரிமைகள் மீறப்படுவதாக முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே விஜிதகேரத் எம்.பி. இதனைத்தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

ஊடகசுதந்திரம் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு உண்மையான செய்திகளை வெளியிடுவோருக்கு அச்சுறுத்தல் விடுத்து அதனை தடுத்துநிறுத்துவதோடு ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது, தாக்குதல் மேற் கொள்வது ,கொலை செய்வது போன்ற சம் பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதன் பின்னணியில் அரசாங்கமே செயற்படுகிறது.

அதுமட்டுமல்லாது தமது உரிமைகளை கேட்டு போராடும் உழைக்கும் வர்க்கத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் மீது அரசாங்கம் தாக்குதல்களை நடத்துகிறது. கப்பம், கடத் தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து இவற்றை தடுத்து நிறுத்த அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை.

இதன் காரணமாகவே சர்வதேச நாடுகளின் தலையீடுகள் எமது நாட்டுக்குள் அதிகரித்துள்ளன.எனவே அரசாங்கமே வழிகளை தயார்ப்படுத்திக்கொடுத்துள்ளது.

எனவே, அரசாங்கத்தின் அடக்குமுறை செயற்பாடுகளை கைவிட்டு எமது நாட்டுப் பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ளும் நிலைமையை உருவாக்க வேண்டும்.

அத்தோடு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பாதுகாத்து ஒரு இலட்சம் பேரில் தொழில் வாய்ப்புக்களை பாதுகாக்க வேண் டும்.

வெளிநாட்டு தலையீடுகளையும் நிபந்தனைகளையும் எதிர்க்கின்றோம்.

அதேவேளை, அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்றக வேண்டும் என்பதனையும் சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகும் என்றார். (அ)

> சண்டை செய்ய விரும்புகிறவனுக்கு ஒவ்வொரு வேலியிலும் கம்பு தென்படும்.
>
> -இங்கிலாந்து

வலம்புரி

# யுத்தத்தின் கொடூரத்தில் இருந்து மக்களை இறைவன்தான் காக்கவேண்டும்

சார்க் மாநாடு ஆரம்பமாகியுள்ள நிலையில் நாட்டில் யுத்தமும் உக்கிரமடைந்துள்ளது. வன்னிப் பகுதியில் தமிழ் மக்கள் பெரும் அவலத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

அவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதில் சர்வதேச அமைப்புகள் பாரா முகம் காட்டுவது வேதனைக்குரிய விடயமாகும்.

இவற்றுக்கு மேலாக இலங்கை அரசு யுத்தம் நடத்துவதில் அதிதீவிரம் காட்டி வருகின்றது.

யுத்தத்தினால் அழிவைத் தவிர வேறு எதனையுமே அடைய முடியாது. இந்த உண்மையை அரசு உணர்ந்து கொள்வதாக இல்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்டுவிட்டால் இனப் பிரச்சினை தீர்ந்துவிடுமென அரசு கூறும் கணக்கு எவ்வகையிலும் நியாயமற்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்பதென்பது இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியதென்பதை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கையாகும்.

இந் நடவடிக்கைக்கு சர்வதேச சமூகம் மறைமுகமாக ஆதரவு வழங்குவது மிகப் பெரும் துரதிர்ஷ்டமாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்கும் படை நடவடிக்கை என்பது சாதாரணமானதொரு நடவடிக்கையல்ல. அதற்குள் பேரழிவுகள் அடங்கியிருக்கின்றன.

மனித உயிர் அழிவு என்பதற்கு அப்பால் பௌதிக சொத்துக்கள், உட்கட்டுமான வசதிகள் என எல்லாமே அழிந்தொழிந்துபோகும் அபாயமுண்டு.

பல்குழல் தாக்குதல்கள் வன்னிப் பகுதியில் இருக்கக்கூடிய காடுகளுக்கு தீயிடுமாயின் காடு வாழ் உயிரினங்கள் அழிந்து போவது மட்டுமன்றி, இயற்கை வளங்களும் நாசமாகிவிடும்.

இத்தகைய பேரழிவுக்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருப்பதானது இலங்கையின் எதிர்காலம் இருண்டதாக மாறப்போகிறது என்பதையும் மனிதப் பேரவலம் நாடு பூராகவும் தாண்டவமாடும் என்பதையும் எடுத்தியம்புவதாகவே அமையும்.

இலங்கையில் காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வருகிறவர்கள் யுத்தம் நடத்துவதில் இன்பம் காண்பவர்களாக இருப்பது இலங்கை மாதா செய்த பெரும் ஊழ் வினைப்பயனாகும்.

இலங்கை மண்ணில் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை எட்டுவோம் என்ற நிலையில் எவருமே இல்லை.

யுத்தத்தை நடத்தி எத்தனைபேரை அழித்தோம் என்பதே ஆட்சியாளர்களின் வெற்றியாக அமைந்துள்ளது.

இத்தகைய குருதி இச்சை கொண்ட மோசத்திலிருந்து மக்களை மீட்க அந்த இறைவன் தான் உதவ வேண்டும்.

# மாணவர்களின் கல்வி நிலை உயரவேண்டுமெனில் பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படவேண்டும்

## கல்வித் தினவிழாவில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரை

மாணவர்களின் கல்வி நிலை உயர வேண்டும் எனில் பெற்றோர்களிடம் விழிப்புனர்வு ஏற்படவேண்டும் என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் ஊடக வளங்கள் பயிற்சி மைய பணிப்பாளருமாகிய பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

காரைநகரில் நடைபெற்ற கல்வித் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



கனடா காரை கலாசார மன்றத்தின் ஆதரவுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையின் கல்வித்தின விழா கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் கா. குமாரவேலு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாம வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், காரைநகர் உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன், தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் வே. தர்மரட்ணமும் பாரியாரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றும் போது இன்றைய் சமூக கட்டமைப்பில் கல்வியின் முக்கியத்துவத்தினை நன்கு புரிந்துகொண்டு சமூதாயத் தினை உருவாக்க அனைவரும் முன்வரல் வேண்டும்

ஏனெனில் விவசாயம், கைத்தொழில் என வளர்ந்த பொருளாதாரம் இன்று கல்வி சார் பொருளாதாரமாக அபிவிருத்தியடைந்துள்ளது.

இந்த கல்வி சார் பொருளாதாரத்தில் இன்றைய இளம் தலை முறையினர் உள்வாங்கப்படல் வேண்டும். ஆரம்பக்கல்வி, இடை நிலைக் கல்வி, உயர் நிலைக்கல்வி, நான்காம் நிலை கல்வி என உயர்ந்துசெல்கின்றது. இவ்வாறு உயர்ந்து செல்லும் நிலைக்கு ஏற்ப மாணவர்கள் மாற்றமடையாவிட்டால் அரச வேலைகளையோ அல்லது பதவி உயர்வுகளையோ பெற முடியாது .ஆகவே வருங்காலத்தில் உயர் கல்வி இன்றியமையாததாகும்.

முன்பொருகாலத்தில் எனது மகள் மூன்றாம் வகுப்புப் படித்தவள் என்ற சமூகம் பின்னர் ஐந்தாம் வகுப்பு, சிறிது காலம் செல்ல எட்டாம் வகுப்பு, கல்விப பொது சாதாரண தரம், உயர்தரம் என்று கூறிய சமூகம் இன்று படித்து விட்டு வீட்டில் இருக்கின்றாள் என்று கூறினாள், அவள் ஒரு பட்டதாரியாகி வேலை கிடைக்காமல் இருக்கின்றாள் என்று அர்த்தம் என்ற நிலையில் பலர் படித்துள்ளனர். இதுவே இன்றைய நிலை ஆதலினால் தான் உயர்கல்வி, அதனினும் மேலான கல்வியைப் பெற வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கல்வி பின்தங்கிய நிலைக்கு யாருமே காரணம் சொல்லிவிட முடியாது. ஏனெனில் 1990இல் நாற்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில்இருந்த ஆசிரிய வளம் இன்று பதினாறு மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில் ஆசிரிய வளம் தாராளமாக உள்ளது. ஆகவே இவ்வாசிரிய வளத்தினை விரையமாக்கப்படாது ஆக்கபூர்வமாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் கைத்தொழில், போக்குவரத்து என்பனவற்றில் பின்னடைவான நிலையிருந்தாலும் 1996ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரசு மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் உடாக பாடசாலை கட்டடங்கள் புதுப் பொலிவு பெற்றுள்ளன.

மாணவர்கள் எண்ணிக்கை மட்டுமே குறைவாகஉள்ளது இதுவும் ஒரு சாதகமான நிலையாக இருக்கின்ற போதும் பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாத நிலையிலேயே தான் கல்வி பின்தங்கிய நிலையில் உள்ளது.

ஆரம்பத்தில் விடுதிகளில் தங்கியே மாணவர்கள் கல்வி கற்றனர். இத னால் வீட்டுப்பின்புலத்தினால் கல்வி யில் பாதிப்பு ஏற்படவில்லை. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இன்றி இலகுவாக சரியான காலவரையறைக்குள் கல்வி கற்றனர். ஆதலால் இன்றைய நிலையில் வீட்டுப் பின்புலத்தினை கல்விப் பின்புலத்திற்கு ஏற்ப சாதகமாக மாற்றம் அடையச் செய்யவேண்டும். அல்லது விடுதிஅமைப்பு முறை நடைமுறைப்படுத்த வேண்டும். விடுதி முறைமை இன்றைய சூழலில் சாதகமாக அமையக்கூடிய நிலைமை இல்லாத படியினால் பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வீட்டுப் பின் புலத்தினை கல்விபின்புலத்திற்கு ஏற்றதாக மாற்றவேண்டும்.

கல்விப் போதனையிலும் பிரச்சினைகள் உண்டு. ஆண்டு ஒன்றில் நூறு மாணவர்கள் கல்வி கற்றால் அதே மாணவர்களில் உயர்தரம் வரைக்கும் அறுபது வீதமானவரே கற்கின்றனர். ஆண்டு பத்து, சாதாரணதரம் கற்பிக்கும் போது சந்தோசமாக கற்பிக்க வேண்டும். குறிப்பாக கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பின்னடைவு ஏற்படாத வகையில் கற்பிக்க வேண்டும். சாதாரண தரத்தில் கணிதத்தில் சித்தியடையாத மாணவனின் உயர் தரக்கல்வி ஆசை நிராசையாக மாறும்நிலைமை உள்ளது. ஆதலால் முக்கிய பாடங்களில் பின்னடைவான மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகளில் கல்வி அதிகாரிகள் நல்ல கரிசனை காட்ட வேண்டும் அத்துடன் அதற்கேற்ற தந்திரோ பாயங்களைக் கையாள வேண்டு எனவும் தெரிவித்தார்.

இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர், இ.த.ஜெயசீலன், தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. புவனேந்திரன், வாழ் நாள் பேராசிரியர் வே. தர்மரட்ணம் ஆகியோரும் சிறப்புரையாற்றியதுடன் மாணவர்கள்,கல்வியாளர்கள் கௌரவிக்கப்பட்டு காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.(அ-246)

## ஈரானுடனான முரண்பாடு தீர்க்கப்படுமானால் மசகு எண்ணெயின் விலையைக் குறைக்கலாம்

### ஒபெக் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

டொலரின் பெறுமதி உறுதியடைவதோடு, ஈரானுடனான முரண்பாடும் தீர்க்கப்படுமானால் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலையை 70 தொடக்கம் 80 டொலர்களாகக் குறைக்க முடியும் என ஒபெக் தலைவரும் அல் ஜீரிய சக்திவள அமைச்சருமான சகீப் கலீல் தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி வலுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் ஈரானுடனான பிரச்சினைக்கும் முடிவு எட்டப் பட வேண்டும். அவ்வாறு நடைபெறுமானால் மசகு எண்ணெயின் விலை 70 தொடக்கம் 80 டொலர்களாகக் குறைவடையும் என்றும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் சங்கத்தின் (ஒபெக்) தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை லண்டன், நியூயோர்க் சந்தையில் 125 டொலர்களாகக் குறைவடைந் திருந்தது. இரு வார காலத்துக்குள் எண்ணெயின் விலை 25 டொலர்களால் குறைவடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ - 6)


குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா -02.08.2008

குருதிக்கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்



இரத்ததானம் -சுலபமானது .
குருதி வழங்குனர் பிரகடனப்பூர்த்தி செய்தல். 5-10 நிமிடம் .
வைத்தியப்பரிசோதனை :10-15நிமிடம்.
பதிவு செய்தல்: 5-10 நிமிடம் .
குருதி வழங் கல்:10-15 நிமிடம்.
ஓய்வும் நீராகாரம் அருந்தலும்:10நிமிடம்
விசேட உணவு உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை. கடினமற்ற நாளாந்த வேலைகளில் அன்றே ஈடுபடலாம். அன்று கடின வேலைகள், கனரக வாகனம் ஓட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

தொ.பே. 021 222

இரத்தவங்கி,,
போதனா வைத்தியசாலை.,
யாழ்ப்பாணம்.

3063


ஓலைச் சுவடிகள் 68

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### பூனை குறுக்கே வந்தால் அபசகுனமா?

பூனையை யாரும் விரோதிப்பதில்லை. அன்பும் பாசமும் அதிகம் காட்டுவது முண்டு. ஆனால் அதன் சகுனத்துக்கு மிக முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

பூனை குறுக்கே பாய்ந்தால் அந்த வழி செல்ல வேண்டாம் என்று ஒரு நம்பிக்கை இன்றும் இருந்து வருகிறது. பூனை வலமிருந்து.இடது பக்கம் செல்வது நல்லதென்றும், இடமிருந்து வலம் செல்வது தீய சகுனமென்றும் கூறி வருகின்றனர்.

இதற்கு ஒரு ஆதாரம் உண்டு என்பதை காணலாம். ஆறாவது உணர்வும் செயல்படும் ஒரு பிராணி பூனை என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பூனை ஓடி வரும் திசைக்குச் செல்ல வேண்டாம் என்றே ஆதிகாலத்தில் கூறியிருக்கலாம். ஏனென்றால் எதிரிக்குப் பயந்தே பூனை ஓடி வருகிறது. இதைக் காலப்போக்கில் வலது இடது என்ற அலங்காரங்களுடன் சகுன விதியாக அமைத்து கூறிவருகின்றனர்.


# ஈரானின் அணுசக்தி இருமடங்கு விரிவாக்கம் ஜனாதிபதி அஹ்மடி நஜாத் பகிரங்க அறிவிப்பு

ஈரானிடம் தற்போது 6ஆயிரம் யுரேனிய செறிவூட்டல் இயந்திர அலகுகள் உள்ளதாக ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மடி நஜாத் அறிவித்துள்ளார்.

இது சில மாதங்களுக்கு முன்பு ஈரானிடமிருந்த யுரேனிய செறிவூட்டல் இயந்திர அலகுகளின் எண்ணிக்கையை விட இருமடங்காகும்.

இந்த செறிவூட்டல் இயந்திர அலகுகளின் அதிகரிப்பை மேற்குலக நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். ஈரான் தனது யுரேனிய செறிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்தி அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட முயற்சிப்பதாக மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில், ஈரானானது தனது அணுசக்தி நிகழ்ச்சித்திட்டம் பொதுமக்களின் சக்தி வளத் தேவைகளை நிறைவேற்றுவதை நோக்காகக் கொண்டுள்ளது எனக் கூறி வருகிறது.

ஏற்கனவே, ஐக்கிய நாடுகள் சபையானது ஈரானின் அணு சக்தி திட்டங்கள் தொடர்பில் தடைகளை விதித்துள்ளநிலையில், மஹ்மூத் அஹ்மடி நஜாத்தின் இந்தப் புதிய அறிவிப்பானது



மேற்குலக நாடுகளுக்கு சவால் விடுக்கும் வகையில் அமைவதாக தெரிவிக்கப்படுகிறது (அ-6)

# வெள்ளிக் கிரகத்திலிருந்து பூமிக்கு அடித்துவரப்பட்ட உயிர்கள்

## விஞ்ஞானிகள் புதிய தகவல்

வெள்ளிக் கிரகத்திலிருந்து உயிரினங்கள் அதி சக்தி வாய்ந்த காற்றினால் பூமிக்கு எடுத்துவரப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமியில் தற்போதுள்ள நுண் உயிரினங்களில் காணப்படும் இரசாயனங்கள், வெள்ளிக் கிரகத்தின் முகில்களில் உள்ளடங்கியுள்ளதாக மேற்படி ஆய்வை மேற்கொண்ட பேராசிரியர் சந்திர விக்கிரமசிங்க மற்றும் கலாநிதி ஜானகி விக்கிரமசிங்க ஆகியோர் உரிமை கோரியுள்ளனர். வெள்ளியும் பூமியும் அவற்றின் ஒத்த தன்மைகள் காரணமாக சகோதரிகளாகவே வர்ணிக்கப்படுகின்றன என பேராசிரியர் சந்திர விக்கிரமசிங்க கூறினார்.

ஐரோப்பிய விண்வெளி நிலையத்தால் 2005ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வெள்ளிக்கிரகத்திற்கான விண்கலப் பயணத் தின் போது பெறப்பட்ட தரவுகளை அடிப்படை யாக வைத்தே, கார்டிப் சென்டர் ஒப் அஸ் ரோபய லொஜி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இவ்விரு விஞ்ஞானிகளும் இக்கண்டு பிடிப்பை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ -6)


# மக்கள் வங்கி வவுனியாக் கிளை - 040

1986ஆம் ஆண்டின் 32ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ட எனும் பிரிவின் கீழான

## ஏலவிற்பனை

## யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சி

1. பருத்தித்துறை சந்தைக்கு அருகாமையில் பஸ்நிலையம் முன்பாக வர்த்தக வணிக வியாபார நிலையங்கள் அமைக்கக்கூடிய பெறுமதிமிக்க முதலாம் ஆதனமும்
2. வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு அண்மையில் நெல்லியடி-திக்கம்-பிரதான வீதி சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்ட ஒரு மாடி கொண்ட விசாலமான வீடும் காணி இரண்டாம் ஆதனமும்

### ஏல விற்பனை

மக்கள் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு கீழ் குறிப்பிடப்படுகின்ற இரண்டு ஆதனங்களும் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே நின்று என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**முதலாம் ஆதனம்:-** 2008-08-02 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.

**காணியின் விவரணம்:-** உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ.ஏ.தங்கமையில் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2005-11ஆம் இலக்க 02-02-2005 திகதிய வரைபடத்தில் வடமாகாணம் யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவு பருத்தித்துறை பட்டின சபை வேன்றிபாகு தேவன் குறிச்சி "நறுவிலியடி" என்றழைக்கப்படும் ஆதனம் விஸ்தீரணம் பரப்பு 2-குளி 00.11.

இவ் ஆதனம் பருத்தித்துறை பட்டினசபை 3ஆம் வட்டாரம் பத்திரகாளி ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 41 ஆகும். பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக சந்தைக்கு அருகாமையில் உள்ளது.

**இரண்டாம் ஆதனம்:-** 2008-08-02 சனிக்கிழமை காலை 11.30 ஏல விற்பனை செய்யப்படும்.

**காணியின் விவரணம்:-** உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ.ஏ.தங்கமையில் அவர்களால் அளந்து 142A இலக்க 19.10.2005ஆம் திகதிய வரை படத்தில் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு கரவெட்டி பிரதேச சபை கட்டைவேலி அல்வாய் மழவராய குறிச்சி இறை "குளப் பிற்றிய வத்தை" என்றழைக்கப்படும் பரப்பு 7(ஏழு) குளி 3.10 (மூன்று தசம் ஒன்று பூச்சியமும்) விஸ்தீரணம் கொண்ட பெரிய காணியும் இதனுள் அடங்கும். ஒரு மாடியுடன் 11 அறைகள் கொண்ட வீடும் கிணறும் கட்டிடங்கள் மரங்கள் ஏனையவைகளும் உள்ளடங்கலாக அனைத்தும்.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி:-** நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்லும் வதிரி-திக்கம் வீதியில் 1 கிலோ மீற்றர் சென்றதும் தேவரையாளி இந்துக்கல்லூரியை அடையலாம். இதற்கு முன் 50 மீற்றர் முன்பாக வலது பக்கமாக இப்பிரமாண்டமான 1 மாடி கொண்ட வீடும் ஆதனமும் உள்ளது.

**தீர்மான அறிவித்தலுக்கு:-** 2008யூன் 06ந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும். 2008-02-05ம் திகதிய தினகரன் தமிழ், 2008-02-06 திகதிய டெயிலி நியூஸ் ஆங்கில பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்:-** ஏல விற்பனை இறுதியில் தீர்ந்து விட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்வரும் முறைப்படி கொடுப்பனவினைப் பணமாக உடன் செலுத்தவேண்டும்.

1. கொள்வனவு விலையில் 10% வீதம். (பத்துவீதம்)
2. உள்ளூர் அதிகார சபையின் வரியாக கொள்விலையில் 1% வீதம் (ஒருவீதம்)
3. ஏலத்தாரரின் தரகுக் கட்டணமாக கொள்விலையில் 2 1/2 வீதம் (இரண்டரை வீதம்)
4. இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக 500/-
5. விற்பனைச் செலவும், வேறு கட்டணங்கள் இருப்பின் அவற்றுக்கான பணம்.
6. விற்பனை உறுதிப்பத்திரம், முத் திரைக் கட்டணம் என்பவற்றுக்கான கட்டணம்

கொள்வனவு விலையில் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) தொகையை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி பிரதேச தலைமை அலுவலகம். இல. 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்திய தொகையாகிய 10% செலவாக இழக்க நேரிடுவதோடு மீண்டும் ஆதனத்தை ஏலத்தில் விற்கும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

உரித்து உறுதிகளையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 021-222-2601
021-222-2956

இல. 692, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021-222-2940

கே.பி.பாலகிருஷ்ணன்
அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

(C/1370)


# நேபாளத்தின் பிரதமராக கொய்ராலா மீண்டும் நியமிக்கப்படுவாராயின் மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்படும்

## மாவோவாத கட்சித் தலைவர் எச்சரிக்கை

(காத்மண்டு)

நேபாளத்தின் பிரதமராக கிரிஜா பிரசாத் கொய்ராலா மீண்டும் நியமிக்கப்படுவாராயின் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தனது கட்சி ஆரம்பிக்கும் என மாவோவாத கட்சியின் தலைவர் பிரசன்டா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தலைநகர் காத்மண்டுவில் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரசன்டா இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் கொய்ராலாவை பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்கு முயற்சித்து வருகின்றன. அவ்வாறான ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமானால் அது மக்களுக்கு எதிரான தாகும். நாங்கள் அத்தகைய நகர்வுக்கு எதிராக மக்கள் போராட்டமொன்றை ஆரம்பிக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொய்ராலாவை ஒரு சிற்றரசர் என வர்ணித்த பிரசன்டா, மாவோவாதிகள் அதி காரத்துக்கு வரும் ஒவ்வொரு முயற்சிக்கும் இத்தகைய சிற்றரசர்கள் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் தொடருமானால், நாங்கள் சிற்றரசர்களை காட்டுக்கு தள்ளிச்செல்ல நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார். (அ -6)

# பிரான்ஸில் 7 வங்கிக் கொள்ளைகளுடன் தொடர்புபட்டிருந்த 16 வயது சிறுமி கைது

(பரிஸ்)

7 வங்கிக் கொள்ளைகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாக16 வயது சிறுமி ஒருவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இம்மாத ஆரம்பத்திலிருந்து மேற்கு பரிஸ் நகர்ப் பகுதியில் இருந்த வங்கிக் கட்டிடங்களில் இடம் பெற்ற கொள்ளை மற்றும் கொள்ளை முயற்சிகளில் மேற்படி சிறுமி தொடர்பு கொண்டிருந்ததாக சட்டத்தரணி டொமினிக் கெயில்லார்டொட் தெரிவித்தார்.

மெய்ஸன்ஸ் அல்போர்ட்டிலுள்ள எச். எஸ். பி. சி. கிளையில் இடம் பெற்ற கொள்ளையையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாதாரண வாடிக்கையாளர் போன்று வங்கிகளினுள் பிரவேசிக்கும் இச்சிறுமி, துப்பாக்கீயைக்காட்டி பயமுறுத்தீ பாதுகாப்பு கதவுகளை திறக்கச் செய்து முகமூடி அணிந்து வந்த தனது சகாக்களுக்கு கொள்ளையடிக்க உதவி வந்ததாக கூறப்படுகிறது. (அ -6)

# ஈரானில் குற்றவாளிகளுக்கு கூட்டாக மரண தண்டனை நிறைவேற்றம்

ஈரான் 29 குற்றவாளிகளுக்கு கூட்டமாக மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது. இப்படிக் கூட்டாக ஈரான் தண்டனை நிறைவேற்றிய சம்பவம் கடந்த சில ஆண்டுகளாக நடக்காதிருந்த ஒன்று. தலைநகர் தெஃஹரானில் உள்ள ஏவின் சிறையில் தண்டனை நிறைவேற்றப்பட்டவர் கள் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் கொள்ளைக்காரர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் சீனாவுக்கு அடுத்து கூடுதலாக மரண தண்டனை நிறைவேற்றிய நாடு ஈரான் என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை. நாட்டில் நிலவும் போதைப் பொருள் மற்றும் குற்றக் கும்பல் பிரச்சனைகளை தீர்க்கும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக ஈரானிய அதிகாரிகள் கூறுகிறார்கள். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஈரானியரான ஷிரின் எபாதி ஈரானிய அரசாங்கம் மரண தண்டனையைக் காட்டி மக்களை அச்சுறுத்துகிறது என்று குற்றம் சாட்டியுள்ளார். (அ -6)

# 600 ஊன்றுகோல்களை எடுத்துச்சென்ற முஸ்லிம் இளைஞர்கள் மதவாச்சியில் கைது

## லங்காதீப தகவல்

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு 600 ஊன்றுகோல்கள் மற்றும் மருந்து வகைகள் பலவற்றினை லொறியொன்றினுள் எடுத்துச் சென்ற இரு முஸ்லிம் இளைஞர்கள் மத வாச்சி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த 25ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இவ்விருவரும் மதவாச்சியை வதிவிடமாகக் கொண்டவர்களாவர். கைப்பற்றப்பட்ட ஊன்றுகோல்கள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றின் பெறுமதி சுமார் 8 இலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

மருந்து வகைகளை வவுனியாவிலுள்ள மருந்தக மொன்றுக்கு கொண்டுசெல்வதாக சந்தேக நபர்கள் விசாரணைகளின் போது தெரிவித்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

ஆயினும் இவ்வளவு பெருந்தொகை ஊன்றுகோல்கள் வவுனியாவுக்கு கொண்டு செல்ல முற்பட்டமை தமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட ஊன்று கோல்கள் வவுனியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து இரகசியமாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளான கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு ஆகிய பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதால் அது தொடர்பில் மேலதிக தகவல் களை பெறுமுகமாக பொலிஸார் பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யுத்தத்தால் அங்கவீனமடைந்திருக்கும் புலிகளுக்கு மேற்படி ஊன்றுகோல்கள் எடுத்துச்செல்ல திட்டமிடப்பட்டதா என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் இவை கொழும்பிலிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (அ-6)

# வடக்கு மாகாண பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் -கல்வி அமைச்சு நடவடிக்கை

வடக்கு மாகாண பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களை பாடசாலைகளின் தேவை கருதி இணைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களின் நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகிறது.

தற்பொழுது நேர்முகப்பரீட்சையின் புள்ளிகள் மற்றும் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் ஒன்று சேர்க்கப்பட்டு நிரல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவர்களுக்கான நியமனங்கள் மூன்றாம் தவணையில் வழங்கப்படலாம். பட்டதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதற்கு நடத்தப்பட்ட பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட ஆயிரத்து 250 பேர் மட்டில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேர்முகப் பரீட்சைக்கு ஆயிரத்து 600 பேர் அழைக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் ஆயிரத்து 250 பேர் மட்டும் சித்தி பெற்றனர்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆகக்கூடிய புள்ளிகளை பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. (அ-6)

# அடுத்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் இலங்கை வீரர் பங்கேற்கக் கூடாது

## கிரிக்கெட் சபைத் தலைவர் ரணதுங்கா வேண்டுகோள்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். தொடரில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ரணதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த ஆண்டு (2009) ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாட முடிபு செய்துள்ளது.

அதேநேரத்தில்தான் பணம் கொழிக்கும் ஐ.பி.எல். இருபது -20 தொடர் இந்தியாவில் நடக்கிறது.

இதனால் இங்கிலாந்து போட்டித் தொடரை இலங்கை அணி இரத்துச் செய்யக்கூடும் என்று பேச்சு கிளம்பியது. ஆனால் திட்டமிட்டபடி இந்தப்போட்டித்தொடர் நடைபெறும் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ரணதுங்கா, முன்னணி வீரர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஐ.பி.எல். தொடரை விடுத்து வீரர்கள் இங்கிலாந்துப் பயணத்துக்கு தயாராக இருக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.


மேலும் ஐ.பி.எல் தொரை விட நாட்டின் அணிக்காக விளையாடுவதில் இலங்கை வீரர்கள் முன்னுரிமை அளித்து செயற்படவேண்டும்.

ஐ.பி.எல் போட்டியில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிப்பதன் மூலம் கிரிக்கெட் சபைக்கு எந்தவித பலனும் கிடையாது.

தனிப்பட்ட முறையில் வீரர்களுக்குத் தான் வருவாய் கிடைக்கும். கடந்த வருடம் நமது அணிக்கு போட்டி இல்லாததால் ஐ.பி.எல். போட்டியில் ஆட வீரர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

2009ஆம் ஆண்டில் இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு திட்டமிட்டது இலங்கை கிரிக்கெட் சபையின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பயணத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் இலங்கை கிரிக்கெட் சபையின் நிதிப் பிரச்சினையை சமாளிக்க உதவுவதுடன், இலங்கை கிரிக்கெட்டின் நீண்டகால வளர்ச்சிக்கும் பயன்படும்.



வீரர்கள் நாட்டுக்காகப் பணியாற்றுவதில் தவறக்கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (5)

# இலங்கை அணிக்கு சிறந்த சுழல் கூட்டணி

## சங்கக்கார மகிழ்ச்சி

(கொழும்பு)

முரளிதரன், மெண்டிஸ் சிறந்த சுழல் கூட்டணியாக திகழ்வதாக சங்கக்கார தெரிவித்துள்ளார். கொழும்பு டெஸ்டில் இலங்கையின் முரளிதரன், மெண்டிஸ் பந்துவீச்சில் அசத்த இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியைச் சந்தித்தது.

இது குறித்து இலங்கை வீரர் சங்கக்கார அளித்த பேட்டியில், முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக வெளியேறியது இந்திய அணிக்கு ஏமாற்றம் அளித்திருக்கும்.

இதற்கு முரளிதரன், மெண்டிஸின் சிறப்பான பந்துவீச்சுத் தான் காரணம். ஒரு அணி 600 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருக்கும்போது முரளி, மெண்டிஸ் கூட்டணிக்கு எதிராக துடுப்பாட்டம் செய்ய நான் கூட விரும்பமாட்டேன்.

தற்போது முதல்முறையாக ஒரு போட்டிக்கு முன் முரளிதரனை தவிர்த்து வேறு ஒருவர் மீது எதிரணி வீரர்கள் கவனம் செலுத்தியதை பார்க்க முடிந்தது.

மெண்டிஸின் பந்துவீச்சு உற்சாகமளிக்கிறது. இவர்கள் இருவரும் சிறந்த சுழற்பந்து கூட்டணியாக இருப்பார்கள் என எதிர்பார்க்கலாம். இது இலங்கைக்கு மகிழ்ச்சியான விடயம். இவ்வாறு சங்கக்கார தெரிவித்தார். (5)

# இங்கிலாந்து பங்கேற்கா விட்டாலும் சம்பியன்ஷிப் லீக்கை நடாத்துவோம்

## இந்திய கிரிக்கெட் சபை அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து பங்கேற்றாலும் பங்கேற்கா விட்டாலும் இந்தியா இருபது -20 சம்பியன்ஷிப் லீக் தொடரை நடாத்தும் என்று இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) துணைத் தலைவர் லலித் மோடி தெரிவித்துள்ளார்.

இருபது -20 சம்பியன்ஷிப் லீக் தொடரை இங்கிலாந்து கிரிக்கெட் சபை அபுதாபியில் நடத்த திட்டமிட்டுள்ளது என்று சண்டே ரெலிகிராப் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து லலித் மோடி கிரிக்இன்போ மீடியாவுக்கு அளித்த பேட்டியில், இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) வீரர்கள் சம்பியன்ஷிப் லீக் போட்டிகளில் பங்கேற்பது, பங்கு உரிமை, லாபத்தை பகிர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் மற்றும் போட்டி விதிமுறைகள் தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை எதிர்ப்புத் தெரிவித்து வந்தது.

போட்டி தொடர்பான விதிமுறைகளைப் பின்பற்ற அவுஸ்திரேலியா (சி.ஏ) மற்றும் தென்னாபிரிக்கா (சி.எஸ்.ஏ), பி.சி.சி.ஐ. நிர்வாகத்திற்கு ஆதரவு தெரிவித்தன.

இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா சார்பாக சிறந்த இரண்டு உள்நாட்டு இருபது -20 அணிகள் பங்கேற்பதாக முதலில் திட்டம் இருந்தது.

இந்தியாவில் நடைபெறும் இருபது -20 சம்பியன்ஷிப் லீக் போட்டியில் பங்கேற்பது சந்தேகம்.

பாகிஸ்தான் ஒரு இருபது -20 அணியை அனுப்ப சம்மதம் தெரிவித்துள்ளது. இங்கிலாந்து விரும்பினால் மிடில்செக்ஸ் மட்டும் பங்கேற்கலாம். ஐ.சி.எல் வீரர்களை உடைய கென்ட் பங்கேற்க முடியாது.

இங்கிலாந்து இடம்பெறாத பட்சத்தில் நியூசிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளில் ஒன்று 8-வது அணியாக கலந்து கொள்ளும். இவ்வாறு லலித் மோடி கூறினார். (5)

# மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் கிறிஸ் ஹைல் பதவி விலகுகிறார்

(போர்ட்ஒப்ஸ்பெயின்)


மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி சமீபத்தில் தனது சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்தது.

இதனால் அணித்தலைவர் ஹைல் மீது மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அதிருப்தி அடைந்துள்ளது.

மேலும் இறுதி இரண்டு ஒருநாள் போட்டியில் அவர் அதிகமான இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்தார். இதனாலும் அவர்மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதனிடையே இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்று அணித்தலைமைப் பதவியிலிருந்து கிறிஸ் ஹைல் விலகுகிறார்.

ஆனால் இது குறித்து தங்களுக்கு எந்தத் தகவலும் வரவில்லை என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.




ஹைல் பதவி விலகும் பட்சத்தில் சம்பியன் தொடருக்காக புதிய அணித்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். (5)

# லாஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ்; டினரா சபினா சம்பியன்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

லாஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் டினாரா சபினா சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டபிள்யூ.டி.ஏ அந்தஸ்துப்பெற்ற ஈஸ்ட் வெஸ்ட் பாங்க் கிளாசிக் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் ரஷ்யாவின் டினாரா சபினா இத்தாலியின் பிளவியா பெனிட்டாவை சந்தித்தார்.

பரபரப்பான இறுதியாட்டத்தில் முதல் செட்டை சபினா 6:4 என கைப்பற்றி முன்னிலை வகித்தார். இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சபினா 6:2 என எளிமையாக தன்வசப்படுத்தினார்.

இறுதியில் சபினா, பெனிட்டாவை 6:4, 6:2 என்ற நேர் செட்டில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

இதேவேளை இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் தாய்வானின் யங்ஜன் சான், சீயாஜங் சுவாங் ஜோடி, செக்குடியரசின் இவாடினோவா, விளாடிமிரா லிரோவா ஜோடியை 2:6, 7:5, 10:4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றனர். (5)

# ரபெல் நடால் சம்பியன்

(ரொரன்டோ)

ஏ.டி.பி., ரோஜர்ஸ் மாஸ்டர் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல்நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

கனடாவின் ரொரன்டோ நகரில் உலகின் முன்னணி வீரர்கள் பங்குபெறும் ஏ.டி.பி., ரோஜர்ஸ் மாஸ்டர் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால் ஜேர்மனியின் நிக்கோலஸ் கெய்பரை சந்தித்தார்.

விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் முதல் செட்டை நடால் 6:3 என கைப்பற்றி முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் இரண்டாவது செட்டை 6:2 என எளிமையாக தன்வசப்படுத்தினார்.

இறுதியில் நடால், கெய்பரை 6:3, 6:2 என்ற நேர் செட்டில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் கனடாவின் டேனியர் நெஸ்டர், செர்பியாவின் நினாட் ஜிமோன்சிக் ஜோடி அமெரிக்காவின், பாப் பிரையன், மைக் பிரையன் ஜோடியை 6:2, 4:6, 10:6 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றனர். (5)

# சர்ச்சையில் சொகைல் தான்வீர்

(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் அக்தர், ஆசிப்பைத் தொடர்ந்து சொகைல் தான்வீரும் சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார். ஊக்க மருந்து சோதனையில் பிடிபட்டு அணியில் இருந்து ஆசிப் நீக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு விதிக்கப்பட்ட தடைகளில் இருந்து அக்தர் என்னும் முழுமையாக விடுபடவில்லை.

இதனால் பலவீனமடைந்து இருந்த வேகப்பந்து வீச்சின் நிலை தான்வீரின் எழுச்சியால் சற்று நிம்மதி அடைந்தது.

இந்நிலையில் தான்வீர் மீது அணியின் தலைவர் சொய்ப் மலிக், பயிற்சியாளர் லோசன் மற்றும் அணியின் மேலாளர் தலத் அலி புகார் தெரிவித்துள்ளனர்.

புகாரின் மீது சமீபத்தில் நடந்த பி.சி.பி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கிரிக்கெட் சபையின் தீவிர கண்காணிப்புக்கு தான்வீர் ஆளாகியுள்ளார்.

இது குறித்து பி.சி.பி தலைவர் நசிம் அஷ்ரப் கூறுகையில், தான்வீரின் நடத்தைகளை கவனித்த சாட்சிகள் உள்ளனர் என்றார். (5)

# நூறு மீற்றர் தடை ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை முதலிடம்

(லண்டன்)

சர்வதேச கிராண்ட் பிரீ தடகள போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. பிஜீங் ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நிலையில் இந்தப் போட்டி மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும்.

பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டும் ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை லாலா ஜோன்ஸ் முதலிடத்தைப் பிடித்தார்.

அவர் பந்தய தூரத்தை 12.58 விநாடியில் கடந்தார். அவுஸ்திரேலிய வீராங்கனை மெக்லீக் 12.63 விநாடியில் கடந்து 2-வது இடத்தையும் ஜோன்னா ஹெய்ஸ் (அமெரிக்கா) 12.63 விநாடியில் கடந்து 3-வது இடத்தையும் பிடித்தார். ஈட்டி எறியும் போட்டியில் கிறிஸ்டினா 65. 93 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கம் பெற்றார்.

கோல்டி சேயர்ஸ் (இங்கிலாந்து) 63.82 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், ஸ்டெபி நெரியஸ் (ஜேர்மனி) 61.81 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்கா வீரர் உசைன் போல்ட் 19.76 விநாடியில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளரான இவர் இந்தப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஒலிம்பிக்கில் உலகின் அதிவேக வீரர் யார் என்பதை நிர்ணயம் செய்யும் 100 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட்டுக்கும் அசபா போவெலுக்கும் இடையே கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

400 மீற்றர் ஓட்டத்தில் இங்கிலாந்து வீரர் மார்ட்டின் ரூனி 44.83 விநாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். (5)

# கடத்தல்கள் அல்ல; கைதுகளே தற்போது இடம்பெறுகின்றது

## பசில் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடத்தல்கள் இடம்பெறுவதில்லை எனவும் விசாரணைகளுக்கெனப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படுவதே கடத்தல்கள் என ஊடகங்களில் செய்தியாக்கப்படுவதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டால் அடுத்த நிமிடம் அவர் கடத்தப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்படுகின்றது.

அவர் பொலிஸாரால் சட்டரீதியாகக் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி இறுதியாகவே வெளியிடப்படும். நபர் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தாமல் 24 மணி நேரம் அவரைத் தடுத்து வைத்திருக்கும் அதிகாரத்தை இலங்கைச் சட்டம் பொலிஸாருக்கு வழங்குகின்றது என அவர் குறிப்பிட்டார்.

எனினும் பொலிஸாரால் அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஒருவர் கைது செய்யப்படும்போது அவர் கைது செய்யப்பட்டமை குறித்த தகவல்களை உறவினர்களுக்கு வழங்க வேண்டும் எனச் சட்டம் கூறுகின்ற போதும், அது எப்பொழுதும் கடைப்பிடிக்கப் படுவதில்லையே என அந்த ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பசில் ராஜபக்ஷ,

நான் அவ்வாறு நினைக்கவில்லை. அவ்வாறெனின் இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சவால் விடுத்திருக்க முடியும். இந்த விடயம் தொடர்பாகக் கவனிப்பதற்கு அமைச்சரவைக் குழு ஒன்று உள்ளது.

அரசாங்கத்திற்கு அவதூறு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கூறப்படுகின்றது என்றார்.

மக்களின் நாடித் துடிப்பை அறிந்து கொள்வதற்காகவே குறிப்பிட்ட காலம் முடிபதற்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த அரசாங்கம் தீர்மானித்தது எனக் குறிப்பிட்ட பசில் ராஜபக்ஷ,

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட தேர்தல் முறைமையினால் மக்களின் நாடித் துடிப்பை அறிவதற்காக இடைத் தேர்தல் ஒன்றை நடத்த முடியாதுள்ளது எனவும் கூறினார். (ச-5)

# நுகேகொடைத் தேடுதலில் 18 பேர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

நுகேகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 18 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பாலமோட...

வெடிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வினை மேற்கொண்டனர். இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை மாலை 4.45 மணிவரை நடத்திப் படையினரை அவர்களின் பழைய நிலைகளுக்கு விரட்டியடித்துள்ளனர்.

இதில் 5 படையினர் கொல்லப்பட்டனர். 7 படையினர் படுகாயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# தொண்டர் ஆசிரியர்கள் மீது மட்டு.வில் பொலிஸார் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த் மற்றும் மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரைச் சந்தித்து தமது நிரந்தர நியமனம் தொடர்பான மனுக்களைக் கையளிப்பதற்காக மட்டக்களப்பு நகரில் கூடியிருந்த அரசாங்கப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்கள் சிலர் பொலிஸாரால் தாக்கப்பட்டுக் கலைக்கப்பட்டதாக மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தி உள்ளது.

இவ் மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காகக் கல்வி அமைச்சர் நேற்று மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார்.

அமைச்சரின் வருகையையொட்டி மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவரான அருள்ஜயா மோகன்ராஜ் தெரிவித்துள்ளார்.

அந்த இடத்தில் கூடிநிற்பதற்கோ அங்கிருந்து அமைச்சர் கலந்து கொள்ளும் வைபவம் நடைபெற்ற இடத்திற்கு செல்வதற்கோ தங்களுக்கு பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் அங்கு கூடியிருந்த தொண்டர் ஆசிரியர்களை பஸ் ஒன்றில் ஏற்றி பொலிஸார் பலவந்தமாக அனுப்பி வைத்ததாகவும் அவர் கூறினார்.

தான் உட்பட 4 தொண்டர் ஆசிரியர்கள் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட போதிலும் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் தலையீட்டையடுத்துப் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் பொலிஸார் மீதான இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த வீரசூரிய, பொலிஸார் தொண்டர் ஆசிரியர்களுடன் பேசியதையடுத்து சுமுகமான முறையில் அவர்கள் கலைந்து சென்றதாகவும் சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று கல்வி அமைச்சரைச் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார். (ச-5)

## இலங்கையுடனான தூதரக...

தலைமை தாங்கினார். ம.தி.மு.க. பொருளாளரும் சட்ட சபை உறுப்பினருமான மு.கண்ணப்பன் உண்ணாநிலைப் போராட்டத்தினைத் தொடக்கி வைத்தார்.

முன்னதாக உண்ணாநிலைப் போராட்டப் பந்தலில் வை.கோ. நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

உலகத்தில் எந்தவொரு தேசத்திலும் அந்நிய நாட்டு இராணுவத்தால் பாதிப்பு ஏற்பட்டால் எதிரி நாடாக இருந்தால் எச்சரிப்பார்கள். இல்லையேல் எதிர்த் தாக்குதல் நடத்துவார்கள்.

உறவு நாடாக இருந்தால் உறவை முறித்துக் கொள்வதாக அறிவிப்பார்கள். ஆனால் உறவு நாடான இலங்கை இந்த அளவுக்குத் தாக்குதல் நடத்தியும் கூட இதுவரை மத்திய அரசால் எந்த எச்சரிக்கையும் விடப்படவில்லை.

தங்கச்சிமடம் கடற்றொழிலாளர் சந்தியாகு சிங்களக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட போது அவரது வீட்டுக்குச் சென்றேன். அங்குள்ள பெண்கள் கதறி அழுது கடலாமைக்குக் கொடுக்கும் பாதுகாப்புக் கூட கடற்றொழிலாளர்களுக்குத் தருவதில்லை. எங்கள் உயிர் அவ்வளவு கேவலமாகப் போய் விட்டது என்று கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

கச்சதீவு ஒப்பந்த சரத்தில் குறிப்பிட்டுள்ளபடி தமிழகக் கடற்றொழிலாளர்கள் அப் பகுதியில் மீன்பிடிக்கவும் ஓய்வெடுக்கவும் வலைகளை உலர்த்தவும் உரிமையளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை தவறி வருவதால் அந்த நாட்டுடனான தூதரக உறவைத் துண்டிக்க வேண்டும். தற்போது இந்தியக் கடற்படை ஒரு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

நடுக் கடலில் இலங்கைக் கடற்படையால் தமிழகக் கடற்றொழிலாளர்கள் சுடப்பட்டால் அது குறித்து உடனே இந்தியக் கடற்படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டால் உச்சிப்புள்ளியிலிருந்து இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி சென்று காயமடைந்த கடற்றொழிலாளரை மீட்டு உடனடியாகத் திருச்சிக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் தமிழகக் கடற்றொழிலாளர்கள் மீது சுடுவதைத் தடுப்பதை விட்டுவிட்டுச் சுடப்படுகின்ற கடற்றொழிலாளர்களுக்குச் சிகிச்சையளிக்க முன்வருவது வெட்கக்கேடான செயல். கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு க்ச்சதீவை மீட்பது தான் என்றார் அவர். (ச-5)

## இந்.பிரதமர்...

சுய நிர்ணய உரிமையை இந்திய அரசால் ஈழத் தமிழர்களுக்குப் பெற்றுத் தர முடியாவிடின் தனியாகப் பிரிந்து சென்று தனி அரசு அமைக்க அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தி மகஜர் கையளிப்பது என முடிபெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இம் மகஜர் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஏனைய 7 நாட்டுத் தலைவர்களுக்கும் தூதரகங்களூடாகக் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இலங்கை வந்துள்ள 350 ற்கும் மேற்பட்ட சர்வதேச ஊடகவியலாளர்களைச் சந்திக்கும் வகையில் எதிர்வரும் 31 ஆம் திகதி இரவு கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடாத்துவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது. (ச-5)

## வவுனியா...

குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரைக் கிலோக்கிராம் எடை உடைய இந்த வெடிகுண்டு தூர இயக்கக் கருவி மூலம் வெடிக்க வைக்கும் வகையில் பொருத்தப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-5)

## விடுதலைப்புலிகளின்...

துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பிராந்தியத்தின் அனைத்து நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொண்டு விடுதலைப்புலிப் பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கை தொடர்பான வெளிநாடுகளின் பிழையான பார்வையை மாற்றி உண்மை நிலையை உலகிற்கு அறிவிக்கவே சார்க் மாநாடு இங்கு நடத்தப்படுகின்றது.

இலங்கை பாதுகாப்பற்ற நாடென விடுதலைப்புலிகள் பொய்யான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் பிரசாரங்களை அரசாங்கம் முறியடித்துள்ளது. பிராந்தியத்திலுள்ள நாட்டுத் தலைவர்களின் பங்களிப்புடன் இலங்கையில் சார்க் மாநாட்டை நடத்துவதன் மூலம் இலங்கை பாதுகாப்பான நாடு என்பதை உலகின் முன்பாக உத்தரவாதப்படுத்தியுள்ளோம் என்றார். (ச)

## இந்தியாவின் ஆதிக்கத்தில்...

கொழும்பில் நேற்று ஜே.வி.பி. நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித கேரத் மேலும் கூறியதாவது,

நாட்டில் முக்கிய நிகழ்வாக சார்க் மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது. ஆசியப் பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற நாடுகளிடையில் நல்ல நட்புறவைப் பேணுவது எமது முக்கிய கடமையாகும்.

கலாசார ரீதியாக, பொருளாதார ரீதியாக நாடுகளிடையில் நட்புறவைப் பேண ஒவ்வொரு நாட்டினது வெளிநாட்டுக் கொள்கைகள் வரவேற்கக் கூடியதாக இருக்கின்றன.

எமது நாட்டில் இருக்கின்ற சில பிரச்சினைகள் காரணமாக எங்களால் சில கொள்கைகளை 50:50 வீதம் கடைப்பிடிக்க முடியாமல் போயிருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் ஆசிய நாடுகளின் முக்கிய பங்கை வகிக்கும் பிரதான நாடான இந்தியாவின் அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான ஆதிக்கத்துக்கு நாம் கட்டுப்பட்டிருக்கின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித கேரத் தெரிவித்தார்.

நாம், நாடு என்ற வகையில் சில தேவைகளுக்காக இந்தியாவிடம் அடிபணிந்து காணப்படுகின்றோம். சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு வருகை தரும் போது கிழக்கு மாகாண சபை முதல்வர் பிள்ளையானைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேவேளை கிழக்கு மாகாணத்தின் திருகோணமலைப் பிரதேசத்தில் வர்த்தக பொருளாதார மையம் ஒன்றை உருவாக்கி இந்தியா அதில் பிரதான ஆதிக்கத்தைச் செலுத்தவுள்ளது.

1987 ஆம் ஆண்டு ஜெயவர்த்தன அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவுக்கே எண்ணெய் அகழ்வு தொடர்பான முழு ஆதிக்கம் சென்றடைந்துள்ளது. இதனால் எண்ணெய் அகழ்வு விற்பனை போன்றவற்றிலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவுக்கு அதனை நாம் வழங்கியுள்ளோம்.

புல்மோட்டை தொடக்கம் சம்பூர் வரை ஆரம்பிக்கப்பட்ட அதிவேக போக்குவரத்துப் பாதை காந்தி மாவத்த என்றே பெயரிடப்பட்டுள்ளது. அங்கு காணப்படும் இரசாயன வளங்களை அவர்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த அவர்கள் எண்ணியுள்ளார்கள்.

எமது நாட்டில் முக்கியமாகக் காணப்படும் சீமெந்துத் தொழிற்சாலையான காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இன்று இந்திய நிறுவனம் ஒன்றுக்குக் கையளிக்கப்படவுள்ளது. இதில் நாம் எமது வளங்களைப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றார். (ச)

## மீள்குடியேற்றம் தொடர்பில்...

என்.சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழுவினர் வலி.வடக்கு மக்களைக் கட்டம் கட்டமாக மீள்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு குழு ஒன்றை நியமித்தனர்.

இக் குழுவில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, வட மாகாணக் கடற்படைக் கட்டளைத் தளபதி றியல் அட்மிரல் ரி.எஸ்.வி.சமரசிங்க, வட மாகாணப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யு. எஸ்.யு.பெர்னாண்டோ ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இவ் ஐவர் அடங்கிய உயர் மட்டக் குழு நேற்றுக் கூடி வலி.வடக்கில் மக்களை மீள் குடியேற்றுவது தொடர்பில் கூடி ஆராய்ந்தது. இச் சந்திப்பில் வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் மற்றும் வலி.வடக்கு கட்டளையிடும் அதிகாரியும் கலந்து கொண்டனர்.

உயர் நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக இவ் உயர் மட்டக் குழு நியமிக்கப்பட்டு செயற்படுவதனால் சம்பந்தப்பட்ட அடிப்படை உரிமைகளில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, படையினரின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்காது மீள்குடியேற்றம் இருக்க வேண்டும் என்பதுபோன்று நீதித்துறையில் நம்பிக்கை கொண்டு உயர் நீதிமன்றுக்குச் சென்ற மக்களின் நம்பிக்கையைப் பாதிக்காத வகையில் நடவடிக்கை இருக்க வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா குறிப்பிட்டார்.

மேலும் முதற்தடவையாக மீள் குடியேற்றப்பட வேண்டியவர்களை அடையாளம் கண்டு அவர்களின் விபரங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 23 ஆம் திகதி இக் குழு கூடும்போது சமர்ப்பிக்க வேண்டும் என வலி.வடக்குப் பிரதேச செயலாளர் மற்றும் வலி.வடக்குக் கட்டளையிடும் அதிகாரிக்கு உயர் மட்டக் குழுவால் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் அந்த விபரங்களை ஆராய்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி உயர் நீதிமன்றில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்போது முதற்கட்டமாக மீள்குடியேற்றத் தீர்மானித்துள்ள மக்களின் விபரமும் ஏனையோரைக் குடியேற்றுவது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பிலான விபரமும் சமர்ப்பிக்க வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜாவால் குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.